Registered as a Newspaper in Sri Lanka

# ஈழமுரசு

முரசு 2 21 7-1985 ஞாயிற்றுக்கிழமை (ஆடி 6 ஜுல்கஃதா 2, முழக்கம் 165

## இருபது யாழ்ப்பாண இளைஞர்கள் பூஸாவிலிருந்து இன்று வருவர்!

பூஸாவிலிருந்து இன்று நூறு தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் இருபது பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் அனுராதபுரத்தில் வைத்து இவர்களைப் பொறுப்பேற்று யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான ஒழுங்குகளை யாழ் பாணம் அரசாங்க அதிபர் கவனித்துள்ளார் வவுனியா பகுதியைச் சேர்ந்த இளைஞர்களும் இன்று விடுதலை பெற்று வருபவர்களில் அடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# நாட்டின் இன்றைய நிலைக்கு இங்கு ஆட்சிபுரிந்த சகல அரசுகளுமே காரணம் என்கிறார் அனுரா

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட, இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் இந்த நாட்டை ஆண்ட சகல அரசாங்கங்களுமே தற்போது நாடு எதிர் நோக்கும் பெரும் பிரச்சினைக்கு காரணகர்த்தாக்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹோட்டல் இன்டர் கொன்டினன்டலில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சியொன்றில் பேசிய அவர், இலங்கை தமிழ் தீவிரவாதிகளால் ஒரு புறத்திலும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மறுபுறத்திலும் அச்சுறுத்தலை எதிர் கொள்ள வேண்டிய நிலையிலுள்ளது என்று சொன்னார்.

இலங்கையில் ஜனநாயகம் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளது என்றும், இதனை அனைத்து மக்களுமே விழிப்பாக இருக்க வேண்டியுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தமது பேச்சில் வலியுறுத்தினார்.

இனப்பிரச்சினை தொடர்

—8-ஆம் பக்கம் பார்க்க

★ ஈழத் தேசிய விடுதலை முன்னணி சென்னையில் விடுத்த அறிக்கை:

# இலங்கை அரசின் போக்கில் சந்தேகமே ஏற்படுகின்றது!

## தமிழரின் நியாய உணர்வை அங்கீகரிக்காது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியாது

(சென்னை)

"ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னேடியாக அளிக்கப்பட்ட பல உறுதிமொழிகள் மீறப்பட்டு வருவதால் இலங்கை அரசின் போக்கில் சந்தேகம் ஏற்படுகின்றது" என்று ஈழத் தேசிய விடுதலை முன்னணி நேற்று சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர்களின் நியாயமான உணர்வுகளை இலங்கை அரசு அங்கீகரிக்காவிட்டால் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியாது எனவும் இதைக் கருத்தில்கொண்டு இலங்கை அரசு புதிய யோசனைகளைத் தெரிவிக்கவேண்டும் என்றும் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் ஆகிய நான்கு இயக்கங்களின் கூட்டு அமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணி விடுத்த இவ்வறிக்கையில் பூட்டான் பேச்சுவார்த்தையில் இலங்கைத் தமிழர்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட பழைய யோசனைகளையே இலங்கை அரசின் பிரதிநிதிகள் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

— 8ஆம் பக்கம் பார்க்க

## நீலனும் சூசையும் நாளை கொழும்பு திரும்புகின்றனர்

கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகத் தமிழகம் சென்ற முன்னாள் எம். பீக்களான கலாநிதி நீலன் திருச்செல்வம், பி. எஸ். சூசைதாசன் ஆகிய இருவரும் நாளை கொழும்பு திரும்பவுள்ளனர்.

ஏற்கனவே கூட்டணித் தலைமை பீடம் அணித்ததற்கமைய நீலன் திருச்செல்வம் கிழக்கு மாகாணத்துக்கும், சூசைதாசன் வடமாகாணத்துக்கும் விஜயம் செய்து கூட்டணிப் பிர

— 8-ஆம் பக்கம் பார்க்க

## 275 பேர் மரணமாகினர்

வட இத்தாலியில் உள்ள ஆற்ற அணைக்கட்டு உடைந்ததால் 275 பேர் கொல்லப்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## "அந்த இருண்ட நாட்களை நினைவுகூர..."

# 25, 26ம் திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள்!

இம்மாதம் 25ம், 26ம் திகதிகளில் தமிழ்ப் பகுதிகள் எங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

"அந்த இருண்ட நாட்கள் தொடர்ந்து பேசட்டும்" என்ற தலைப்பில் இது தொடர்பான பிரசுரமும் வெளியிடப்பட்டுள்ளது.

"வெலிக்கடை வெஞ்சிறைப் படுகொலைகளையும், தொடர்ந்து நடந்த 1983 ஜுலை இனக் கலவரங்களையும் தமிழீழம் தம் துயர வரலாற்றோடு பதித்து இரண்டு வருடங்களை நிறைவு செய்து கொள்கிறது. இரத்தம் தோய்ந்த அந்த நிகழ்வுகளைக் கண்டிக்கும் முகமாகவும், நினைவுகூரு முகமாகவும் எதிர்வரும் 25, 26ம் திகதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்போம்"

-8ம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு அகதிகளுக்கு தென்னிந்திய திருச்சபை உதவி

(பரந்தன்)

முல்லைத்தீவு பகுதியிலுள்ள அகதிகளுக்கு வழங்குவதற்கென அறுபதாயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருட்களை யாழ். கிளிநொச்சி தென் இந்திய திருச்சபையினர் கொடுத்துதவியுள்ளனர்.

தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த ஆயர் அதிவண. டி. கே. அம்பலவாணர் இப் பொருட்களை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஜெகா செந்தில்நாதனிடம் கையளித்தார்.

முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள பாடசாலைகளிலும், இந்து ஆலயங்களிலும், சினிமாத் தியேட்டர்களிலுமாக சுமார் ஐயாயிரம் அகதிகள் வரை இருந்து வருகின்றனர்.

## ரெலோவிடம் மன்னிப்புக் கோரினர்

யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகர் ஒருவர் சென்னையில் கடத்தப்பட்டது தொடர்பாக 'ரெலோ'வின் பெயரைச் சம்பந்தப்படுத்தி சுலோகம் எழுதி வைத்தவர்கள், பின்னர் 'ரெலோ'விடம் மன்னிப்புக் கோரினர். "ரெலோவிடம் மன்னிப்புக் கோருகிறோம்" என்ற தலைப்பில் நேற்று எழுதி வைக்கப்பட்ட சுலோக அட்டையில் "தவறான வழிநடத்தலின் காரணமாக ரெலோ

- 8ஆம் பக்கம் பார்க்க

## ஓம்லோ அடிகள் ஜீப் வண்டி கைவிடப்பட்டு நின்றது

(பரந்தன்)

பரந்தன் பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய ஓம்லோ அடிகளாரின் ஜீப் வண்டி நேற்று முன்தினம் காலை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் முதலாம் கட்டைவடியில் இந்த ஜீப் வண்டி அநாதரவாக விடப்பட்டிருந்தது. இவ் வண்டியைப் பார்த்த சில இளைஞர்கள் அதை எடுத்துச் சென்று அவரிடம் ஒப்படைத்தனர்.

ஓம்லோ அடிகளின் ஜீப் வண்டி இனந்தெரியாதவர்களினால் 3 மாதங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டது. இவரின் வாகனத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு பரந்தன் பங்கு மக்களால் நடாத்தப்பட்டிருந்த உண்ணாவிரதமும் இரண்டு தடவைகளாக இளைஞர்களின் வேண்டுகோளின் பேரில் பிற்போடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய கூட்டம்

(உடுப்பிட்டி)

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் கரவெட்டிப் பிரிவு அங்கத்தவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமான விசேட பயிற்சிக் கருத்தரங்கும், கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பிரதேச அத்தியட்சகர் திரு. என். போஜனும் இதில் கலந்துகொள்ளவிருக்கிறார்.

'லங்கா புவத்' அறிவிப்பு:

## கொழும்பில் குண்டு வெடிக்க சென்னையிலிருந்து உத்தரவு!

ஜனாதிபதி ஜெயவர்த்தனா கொலை முயற்சி சம்பந்தமான குண்டு வெடிக்கும் திட்டம் சென்னையில் இருந்து ஈரோஸ் தலைவரால் இங்கு விடுக்கப்பட்டதாகக் கடந்த ஒன்பது நாட்களாக நடைபெற்ற பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக 'லங்கா புவத்' தெரிவித்துள்ளது.

— 8ஆம் பக்கம் பார்க்க

# மட்டுநகரில்
# குளோபல்!

கொழும்பிலும் யாழ்நகரிலும்
நிகரற்ற

## ரெலெக்ஸ் ரெலிபோன்

சேவைகளை வழங்கிப் பெயர்பெற்ற

# குளோபல்

ஸ்தாபனத்தினர்

# மட்டுநகரிலும்

**சர்வதேச நேரடிச்சுழல் தொலைபேசித் தொடர்பு**
**(International Direct Dialling Telephone)**

**சர்வதேச தொலைப்பதிவுத் தொடர்பு**
**(International Telex)**

**சேவைகளை**

**ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள்.**

எமது சர்வதேச தொலைபேசிகள் மூலம்
வெளிநாடுகளில் வாழும் உங்கள் அன்பிற்குரியவர்களுடன்
நொடிப்பொழுதில் தொடர்புகொண்டு
அளவளாவி மகிழுங்கள்!
எமது 'ரெலெக்ஸ்' மூலம் எழுத்தில் இருக்கவேண்டிய
செய்திகளைப் பரிமாறுங்கள்!

சனி, ஞாயிறு, ஏனைய விடுமுறைநாட்கள் உட்பட்ட
எல்லா நாட்களிலும் எல்லா நாடுகளுக்கும்
இரவு பகல் 24 மணி நேரமும்
இடைவிடாத் தொடர்ச்சியான சேவை உண்டு.

# குளோபல்
# கொம்யூனிக்கேஷன்ஸ்
# லிமிற்றட்

நகராண்மை வியாபார மத்திய நிலையம்
(MUNICIPAL TRADE CENTRE)
சந்தை வீதி
(MARKET ROAD)
மட்டக்களப்பு

ரெலெக்ஸ் : 21741 GLOBAL CE
21494 GLOBAL CE

ரெலிபோன் : 2843
2860





✲ கைதடி வடக்கு மேகநாதன் ராணி தம்பதிகளின் மகள் காயத்திரி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ மட்டுவில் தெற்கு பாலசிங்கம் போகராணி தம்பதிகளின் மகள் தனுஷா இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ மல்லாகம் கனகநாயகம் நிர்மலா தம்பதிகளின் மகன் நிசாந்தன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக்கொண்டாடுகிறார்.

✲ கன்னிரூற்று சோதிதம்பதிகளின் மகள் தர்மிலா இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✲ பருத்தித்துறை, காராளசிங்கம் இராஜேஸ்வரி தம்பதிகளின் மகள் விக்னேஸ்வரி இன்று தனது ஐந்தாவதுபிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## உற்சவம்

ஆவரங்கால் நடராச இராமலிங்க சுவாமி கோவில் பார்வதவர்த்தனி அம்மன் தீர்த்தோற்சவ விழா இன்று ஞாயிறு காலை ஒன்பதுமணிக்கு நடைபெறும். இரவு பூங்காவனமும், திருக்கல்யாணமும் இடம்பெறும்.

## நயினையில் ஆடிப்பூர விழா

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேவஸ்தானத்தில் ஆடிப்பூரவிழா மிகவும் சிறப்பாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். காலையில் சங்காபிஷேகம் நடைபெற்று அம்பாள் வீதி உலாவருதலும் இரவு விசேட பூசை ஆராதனைகளும் இடம் பெறும்.

## ஆடிப்பூரமும் பூச்சொரிதலும்

புளியங்கூடல் செருத்தனைப் பதி மகாமாரி அம்பாள்தேவஸ்தான ஆடிப்பூரமும், பூச்சொரிதல் விழாவும் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7.00 மணிக்கு அஷ்டோத்திரசத சங்காபிஷேகம் ஆரம்பமாகும், 9.30க்கு விசேட பூசையும், 10 00மணிக்கு தேவ, கீத, கோஷங்களுடன் வீதி வலம் வருதலும். 11.00 மணிக்கு அம்பிகைக்கு பூசாகர்மாவும், புஷ்பாஞ்சலியும் நடைபெற்று அம்பிகை வீதிவலம் வருதல் ஆகியன இடம்பெறும்.

## வரி விளம்பரம்


### அறிவித்தல்

கொழும்புக்கு வரும் பிரயாணிகள் தங்க இடவசதி வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: ராமன், 27, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை, போன்: 587909


## பிறந்த தின வாழ்த்து




### செல்வன் சபேசன் சின்னத்துரை

எழுதுமட்டுவாள் தபால் கந்தோர் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவபூசணி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் சபேசன் இன்று (21-7-85) தனது முதலாவது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, கிரிதா அக்கா, கம்ஷா அக்கா, அப்பம்மா, பப்பா, அம்மம்மா, அன்ரா, ஆசை, சித்தா, எழுதுமட்டுவாள் மாமா குடும்பத்தினர், கச்சாய் பெரியப்பா குடும்பத்தினர், கச்சாய் மச்சான் குடும்பத்தினர், கச்சாய் மாமாமார் குடும்பத்தினர், பரந்தன் மாமா குடும்பத்தினர், மற்றும் நண்பர்கள், உறவினர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.


## ஏலவிற்பனை

2 சிலிண்டர் ஜன்மார் 30. H.P. மீன்பிடி இயந்திரம் 27-7-85 சனிக்கிழமை காலை 11 மணியளவில் எம்மால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். இயந்திரத்தைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரங்களில் வந்து பார்வையிடலாம்.

**குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்**
சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி.
குருநகர். யாழ்ப்பாணம்.




# பேச்சுவார்த்தை நடத்த இலங்கை இணங்கியதற்கு முக்கிய காரணிகள் என்ன?

**1970 இல்** ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் நாட்டில் தோன்றியிருந்த பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரச முதலாளித்துவ அமைப்பினூடாக தீர்வுகாண முற்பட்டனர். முதலாளித்துவ அமைப்பின்கீழ் சிங்கள இனத்தினைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளைச் செய்ய அரசு முற்பட்டது.

சனத் தொகை அதிகரிப்பு வேகத்திற் கேற்ப பொருளாதாரவளர்ச்சி வீதம் அமைந்திருக்கவில்லை. கைத்தொழில் அபிவிருத்தி, நவீன மயமாக்கப்பட்ட விவசாய அபிவிருத்தி என்பன செய்யப்படாத பட்சத்தில் அரச கூட்டுத்தாபனங்களில் உத்தியோகங்களை நோக்கி மட்டும் வேலை தேடும் சூழ்நிலை அமைந்திருந்தது உற்பத்தி அபிவிருத்தி இல்லாமல் இந்த உத்தியோகத்துக்கான வாய்ப்புக்கள் மிக ஒடுங்கலானது.

ஒடுங்கலான வேலைவாய்ப்புள்ள உத்தியோகத்தையாவது பெற்றுவிட வேண்டுமென்ற போட்டி தமிழ், சிங்களக் கல்வி கற்றோர் மத்தியில் தோன்றியது. குறிப்பாக வடக்கைப் பொறுத்த வரையில் வரண்ட வலயமாக இருந்தமையாலும், திட்ட மிட்ட பொருளாதார அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படாமையாலும், மக்கள் இயல்பாகவே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் இல்லாமையும், கல்வி சார்ந்த உத்தியோகத்தின் மீது தான் ஒவ்வொரு தாயினதும் எண்ணமும், தந்தையினது எண்ணமும், ஒவ்வொரு சிறுவன் சிறுமியினது எண்ணமும் குவிந்திருந்தது. அல்லது குறைந்த பட்சம் சமூகத்தின் விழுமியம் உத்தியோகமாகவே இருந்தது.

ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பு ஏற்பட்டாலும் கூட நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எதனையும் தீர்த்து விட முடியாது. பிரதானமாக பொருளாதாரத் துறையினை எடுத்துக் கொள்வோமாயின் எமக்கென ஒதுக்கப்படக்கூடிய மாநில அரசிற்கு பொருளாதார சுயாதிக்கம் இருக்கமாட்டாதென்பது தெளிவானது. ஏனெனில் பொருளாதார சுயாதிக்கம் இருந்தால் தமிழ் மாநிலம் வளர்ச்சியடைந்து இறுதியில் அதுவே தனியரசாக மாற வழிவகுத்து விடுமென்ற அச்சத்தின் காரணமாக சிங்கள ஆட்சியாளர் தமிழ் மக்களின் மாநிலத்திற்குப் பூரண பொருளாதார சுயாதிக்கம் ஏற்பட விடமாட்டார்கள். உதாரணமாக, பாரிய கைத்தொழிற் சாலைகளை எமது கட்டுப்பாட்டில் அமைக்க அனுமதிக்க மாட்டார்கள்.

எனவே பொதுவாக நோக்கும் பொழுது நாம் எதிர்நோக்கும் சமூக, அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் எதனையும் சமரசப் பாதைகளினால் இலங்கை என்ற ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் வைத்து ஒருபோதும் தீர்க்க முடியாது. நாம் எதிர் நோக்கும் காணியில்லாப் பிரச்சினை, வீடில்லாப்பிரச்சினை, வேலையில்லாப்பிரச்சினை, கல்வியில்லாப்பிரச்சினை ஆகிய எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கமுடியாது. நாம் எதிர் நோக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் மிகவும் ஆழமானது. 70களில் எமது போராட்டம் உத்வேகம் பெற்றமைக்குப் பின்னணியாக இருந்த அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையை ஆராய்வோம்.

சுயபாஷைக் கல்வியின் மூலம் சிங்கள மக்கள் பக்கம் இருந்து அதிகளவு தொகை படித்த மக்கள் தோன்றத் தொடங்கியதும் அவர்களது வெளிவரவுக்கு ஏற்ப வேலை வாய்ப்புக்கள் உயர் கல்வி வாய்ப்புக்கள் இல்லாதிருந்தன எனவே மிகச் சிறு அளவிலான வரையறையுள்ள கல்வி உத்தியோகம் போன்றவற்றிற்கு அதனையும் விட பன்மடங்கு கூடிய தொகையில் சிங்கள இளம் சந்ததியினர் வெளிவரவே கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் பெரும் நெருக்கடிகள் தோன்றின. அந்நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு இன விகிதாசாரம் புகுத்தப்பட்டது.

இதன் விளைவால் தமிழர்கள் பொருளாதாரம் பற்றிய நம்பிக்கைகளை இழந்து விரக்தியுறத் தொடங்கினர். இக்கல்வி, வேலைவாய்ப்பு பற்றிய பிரச்சினைகள் கூர்மையடைந்து வெளிவரவே 70 ஆம் ஆண்டு தரப்படுத்தலையொட்டித் தமிழ் இளைஞர்கள் நேரடி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். உயர் கல்வி கற்பதற்கும், வேலைவாய்ப்புக்குமான பிரச்சினை மட்டும்தான் தமிழர்களின் பிரச்சினை என்பது அல்ல. பொருளாதார ரீதியாக வீடற்றோர், நிலமற்றோர், அடிப்படைக் கல்வி கூட கற்க வசதி இல்லாத மக்கள் பல்கிப் பெருகி வந்தனர். ஆனால் அவர்களுக்கு அரசியற் தலைமை கிடைத்திருக்கவில்லை. மத்தியதர வர்க்கத்துக்குத்தான் அரசியல் தலைமை கிடைத்தது. ஏனெனில் அரசியல் தலைமை மேற்தர மத்திய வர்க்கத்தின் தலைமையாக இருந்தது.

எந்தவித பொருளாதார விருத்திக்குமான சாத்தியக் கூறுகள் இல்லாது போகவே ஒரு புறத்தில் வேலையற்றோர் என்னும் ஒரு படை, பொருளாதார வாய்ப்பற்றோர் என்னும் படை, போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கியது. இப்போது எமது தமிழீழ விடுதலைப் போராட்டமானது சகல மக்களும், தழுவிய காணியில்லா, வீடில்லாப பிரச்சினை, சீதனப் பிரச்சினை, (சீதனப் பிரச்சினையென்பது அடிப்படையில் காணி, வீடு, தொழில் பற்றியதாகும்) கல்வி, சுகாதாரம் வேலைவாய்ப்பு ஆகிய சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். எல்லாம் மக்களினதும் வளமான வாழ்வு இன ரீதியான ஒடுக்கு முறையின் பெயரால் தடுக்கப்படுகிறது. எனவே இவ்வாறான பிரச்சினைகள் தீர தமிழீழத்தினை விடுவித்து சோசலிச அரசை அமைப்பதன் மூலமே தீர்க்க முடியும். இதனைவி— குறைந்த

—7-ஆம் பக்கம் பார்க்க

## வண்ணம்

வாவி மலகூடங்களை நீரடைப்பு ஆக மாற்றுவது பற்றிப் பரபரப்பாயிருக்கிறது. ஊறும் குழிகளை (Soakage pits) அமைக்க உத்தேசமாம். ஆனால், இட நெருக்கடி இருக்கிற போது கிணறுகளுக்கும் இந்தக் குழிகளுக்குமிடையில் இருக்க வேண்டிய குறைந்த பட்ச தூரம் பற்றிய விதி என்னவது? போதாதற்கு, கோடையிலும் இப்போ நுளம்புத் தொல்லை இருப்பதற்கு இந்தக் குழிகளே காரணமென்றும் நிருபிக்கலாம் போலிருக்கிறது.

பொருளாதாரம், இட வசதி என்பவற்றால் Septie Tanks அமைக்கவும் பலருக்கு வசதிப்படாது.

– எல்லாவற்றையும் யோசிக்கையில் நகருக்கென ஒரு பொது வடிகாலமைப்பை (Sewerage Seheme) அமைப்பதே உசிதமாகப் படுகிறது.

—— வண்ணன்

# பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுப்பீர்

‘சபா’

“புராதன இந்தியாவின் அரசியல்” என்ற நூலில் வெ. சாமிநாதசர்மா மகாபாரத யுத்தம் என்ற சகோதர அழிப்புப்போர் இந்தியாவின் வரலாற்றுப் போக்கையே மாற்றி விட்டது என்கிறார்.

கீதையில் அருச்சுனன் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட அத்தனை தீயவிளைவுகளும் தோன்றக் காரணமாயிருந்தது அப்போர். யுகதர்மத்தின் போக்கைத் தெரிந்தவர்கள், மனிதனுள் நிகழும் முக்குணப் போராட்டம் எப்படித் தேசிய இனங்களிடையே தற்கொலைப் போராட்டமாக மாறும்; எப்படிப் பஞ்சுப் பொதியுள் வைத்துக் கட்டிய நெருப்புத்தழல் போல உள்ளே இருந்து அழிக்கும் என்று உணர்ந்தார்கள்.

பார்த்துக் கொண்டிருக்கத் தெரிந்தவர்கள் – விதுரர் போன்ற மகான்கள் வெறும் பார்வையாளர்களாக இருந்தார்கள். “சும்மா இரு சொல்லற” என்று உள்ளுணர்வின் கட்டளையை ஏற்று மௌன சாட்சிகளாக நின்றார்கள். பீஷ்மர் போன்றவர்கள் கூட சூழ்நிலைக்கு அடிபணிந்து பங்காளர்களாக மாறித் தம் உயிரையே சகோதரப் போர் வேள்வியில் பலியாகக் கொடுத்தனர். வெறும் பார்வையாளர்களாக இருக்க அவர்களது பற்றுக்கள் அவர்களை விடவில்லை.

மற்றுமொரு பிரிவினர் சும்மா இருக்கும் பார்வையாளர்களாகவோ போரில் ஆயுதம் ஏந்தும் பங்காளர்களாகவோ மாறாமல் தமக்கெனப் புதிய பாதை வகுத்துக் கொண்டனர். யமுனை நதிக்கரையில் ஹஸ்தினபுரத்தில் புதிய மண்டபம் அமைத்துக் குதூகலமாகத் திறப்பு விழாச் செய்து மிடுக்காக இருக்கும், துரியோதனனையர் ஈரைம்பதின்மரும், தமக்கென ஒதுக்கப்பட்ட வானப் பிரஸ்தத்தை இந்திரப் பிரஸ்தமாக்கித் தம் அருமுயற்சியால் காடுகெடுத்து நாடாக்கி வாழும் தருமர் ஆதியோர் ஐவரும் என்ன இருந்தாலும் இரு சகோதரரின் பிள்ளைகள். அவர்களுடைய சண்டை குடும்பச் சண்டை. அதில் தலையிட்டு ஒரு பக்கம் போராட நாம் யார்? ஆனால் அதே சமயம் தருமத்துக்கும் அதர்மத்துக்கும் இடையில் நிகழும் போரில் பங்கு பெறாது பார்த்துக் கொண்டு நிற்கவும் மனம் வரவில்லை.

ஏதோ ஒரு பங்களிப்புக்கூடத்தானும் தனது சக்திகளைப் பயன் படுத்த வேண்டும் என்று நினைக்கிறான் ஒரு தமிழ் மகன். அவன்தான் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன். (அப்பொழுது சேரநாடும் தமிழ் நாடாயிருந்தது.) அவன் கதையைத் தமிழ் வீரத்தின், தமிழர் பண்பாட்டின், விளைநிலமாகத் திகழும் புறநானூறு இரண்டாம் பாட்டில் காணலாம்.

அவன் சாதாரண மன்னன் மட்டுமல்லன். அவன் போற்றுரை — பகைவரை — பொறுத்தலில் நிலமகள் போலறவன். சூழியலில் (இராஜதந்திரம் அல்லது டிப்புளோமஸி) வானவெளி போன்ற விஸ்தாரம் (அகலம்) உடையவன். வலிமையும், பகைவரை அழிக்க வல்ல துணிவும், அதேசமயம் ஆழ்ந்த இரக்கமும் உடையவன். அப்படிப்பட்ட பேரரசன் தொன்மை வாய்ந்த பாரத நாட்டின் வடபுலத்தில் நிகழும் போரில் பங்குபற்றுமாறு இருபகுதியினரும் விடுத்த வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கிறான். ஒரு வகையில் பார்வையாளனாக — ஆயுதம் ஏந்திப் போரிடாமல் நிற்கிறான்.

ஆனால் மற்றொரு வகையில் பங்காளனாகப் பணி புரிகிறான். பெரிய குதிரைப் படையுடைய பாண்டவர்களையும் அவர் தமக்கென முந்தையோர் அளித்த பங்கு நிலத்தை அபகரித்த நூற்றுவர்களையும் சமபுதி பண்ணி இரு பகுதியாருக்கும் தம் உயிர்த் தியாகத்தின் மூலம் நல்வாழ்வு அளிக்கக் களம் புகுந்த வீர மறவர்களுடைய வயிற்றுப் பசிபோக்க அளவிட முடியாத சோற்று மலைகளையே உற்பத்தி செய்து வழங்குகிறான். இதனை முரஞ்சியூர் முடிநாகனார் என்ற புலவர் பாடுகிறார்.

“அலங்கு உளைப்புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம் பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப்
பெருஞ்சோற்றுமிகுபதம்வரையாதுகொடுத்தோய்”

இன்று இதிகாச காலமில்லை. தர்மத்துக்காக உயிர் விடுகின்ற க்ஷத்திரியரும் இல்லை ஜனநாயகம் என்ற பெயரால் கட்சியரசியலின் தில்லுமுல்லுகளின் வழியே அதிகார பீடம் ஏறியவர்கள் தம்மைத் தர்மிஷ்ட அரசர்களாகக் காட்டிக்கொண்டு ஏறியடைந்த “கிறீஸ்” பூசிய தூணின் உச்சியிலிருந்து இறங்க மனமின்றி, யார் எக்கேடு கெட்டாலும் இருந்த உச்சியிலேயே இருக்கத் தீர்மானமாக நிற்கின்ற காலம் கொடாக்கண்டன் விடாக்கண்டன் கதையாக எந்தச் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைகளைப் பிறருக்குப் போதிக்கிறார்களோ அதில் அடுகளவும் தாம் கைக்கொள்ளாது இருக்கும் காலம் இதனால் அரசியல் சகதியில் கால்விடாது விலகி நிற்க விரும்பும் நல்லவர்கள் “இன்று நாம் செய்ய வேண்டுவது யாது?” என்ற வினாவுக்கு விடை தேடுகின்ற வேளை அவர்களுக்கு நாம் சிபார்சு செய்யக்கூடியது முடிநாகனாரின் வாக்கையே. “ஐவரொடு சினந்து ஈரைம்பதின்மரும் பொருது களத்து ஒழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுப்பீராக.”

“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள் வைப்புழி”

# வியாகரண சாகரம்

# வித்துவான் சுப்பையாபிள்ளை

**மதியும் பிறையும்**

**(முல்லைமணி)**

வித்துவான் பட்டம் பல்கலைக் கழகங்களால் அங்கே கற்கும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் ஒரு தராதரப் பத்திரம். ஒரு மாணவர் பல்கலைக் கழகமொன்றில் தொடர்ச்சியாக மூன்று நான்கு ஆண்டுகள் சில இலக்கண இலக்கிய நூல்களையும் சில இலக்கிய நூல்களின் பகுதிகளையும் படித்துப் பரீட்சையில் சித்தியெய்தி விட்டால் வித்துவான் பட்டத்தைப் பெறமுடியும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் படித்து வித்துவான் பட்டத்தைப் பெற்றோர் பலர் எம் நாட்டில் உண்டு. இலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கிய தமிழ் தராதரப் பத்திரம் (Certificate in Tamil) பெற்ற சிலர்கூடத் தம்மை வித்துவான் என்று கூறிக் கொள்வதுண்டு.

இவர்களைவிட வித்தியாசமானவர் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்கள். இவர் இளமையிலிருந்தே கற்கவேண்டிய நூல்களையெல்லாம் முறைப்படி கற்றவர். பின்னர் தமிழிலுள்ள பேரிலக்கணங்களையும் இலக்கியங்களையும் ஒன்றுந் தவறாமல் முழுமையும் ஒரு முறைக் கிருமுறை பாடங் கேட்டவர். அவைகளைத் தம் மாணாக்கருக்குப் பன்முறை பாடஞ் சொன்னவர். இவரே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கண ஆசிரியராகத் திகழ்ந்தவர். இன்னும் வித்துவான் சுப்பையாபிள்ளைக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பு ஏனைய இன்றைய வித்துவான்களுக்குக் கிடைக்கவில்லையென்றே கூறலாம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் கல்வி மரபிலே மூழ்கித் திளைத்தவர் இவர். நாவலரின் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவ சிரோமணி அவர்கள் மிகவும் பிரசித்தமான தமிழ் அறிஞர். நாவலரிடத்தும், வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையிடத்தும் தமிழ் கற்றவர், மட்டுவில் க. வேற்பிள்ளை உபாத்தியாயர் அவர்கள்.

சிதம்பரத்தில் நாவலர் பெருமானால் தாபிக்கப்பட்ட வித்தியாசாலையில் தலைமையாசிரியராய் அமர்ந்து தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, இதிகாசங்கள், புராணங்கள், காவியங்கள் முதலிய நூல்களைப் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்தார், ம. க. வேற்பிள்ளை அவர்கள். இவரிடம் முறைப்படி பாடங் கேட்டவர் வித்துவான் சுப்பையாபிள்ளை.

இலக்கண அறிவு அருகிக் கொண்டு செல்லும் இக்காலத்தில் தொல்காப்பியத்தின் உரை நூல்களான இளம்பூரணம், நச்சினார்க்கினியம், சேனாவரையம், பேராசிரியம் என்பவற்றை மரபு ரீதியாகப் பாடஞ் சொல்லி வந்தவர் இருவர். ஒருவர் மகாவித்துவான் கணேசையர். மற்றவர் வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்கள். தொல்காப்பிய உரைகளையும் பிரயோக விவேகம், இலக்கண விளக்கச் சூறாவளி போன்ற நூல்களையும் எத்தனையோ மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொன்னவர் வித்துவான் அவர்கள்.

## வாழ்க்கை

வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்களின் பிறப்பிடம், இந்தியாவிலுள்ள சிதம்பரம். இவர் 1900 ஆம் ஆண்டு தை மாதம் 22 ஆம் திகதி பிறந்தார். இவர் குழந்தையாயிருக்கும் பொழுதே தாய் தந்தையர் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். குழந்தை சுப்பையா, தாய் வழிப்பாட்டியார் ஆதரவிலும் பெரியதாய் தந்தையர் ஆதரவிலும் வளர்ந்துவந்தார். பள்ளிப் பருவம்வந்ததும், சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தம் கல்வியைத் தொடங்கினார். அப்பொழுது நாவலரின் மாணாக்கர் திரு. ந. க. சதாசிவம்பிள்ளை பாடசாலையை நிர்வகித்துவந்தார். அவருக்குப்பின் கோப்பாய் திரு. ச. பொன்னம்பலபிள்ளை பாடசாலைப் பரிபாலகரானார். அவர்கள் தமிழ் அபிவிருத்தி காரணமாக, அங்கு படித்து வந்த ஒவ்வொரு வகுப்பிலும் முதலாம் இரண்டாம் இடத்தைப் பெறும் மாணாக்கர்க்கு பரிசில்கள் வழங்கிவந்தார்கள். சுப்பையா அவர்கள் ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்தர வகுப்பு வரைக்கும், பின்னர் வித்துவான் வகுப்பிலும், முதலாம் அல்லது இரண்டாம் மாணவராகத் தேறி, பல பரிசில்களைப் பெற்றார். அப்பரிசில்கள் பெரும்பாலும் மார்கழி மாதத்தில் ஸ்ரீ நடராசப் பெருமானது மகோற்சவ இறுதி நாள்களில் வழங்கப்படும். யாழ்ப்பாணத்துப் பிரபுக்களும் அறிஞர்களும், இந்திய, தமிழ் அறிஞர்களும் கூடியிருக்கும் பெரும் சபையில் இப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

சுப்பையாபிள்ளை அவர்கள் உயர் வகுப்பில் கல்வி கற்ற காலத்தில், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்து கல்வி கற்பித்தார்கள். உயர்தர வகுப்புக்களில் சமஸ்கிருதமும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. சுப்பிரமணிய சாஸ்திரிகளும் ஸ்ரீ பாண்டிராஜா சாஸ்திரிகளும் சமஸ்கிருதம் கற்பித்து வந்தார்கள். வியாகரணம் (இலக்கணம்) அலங்கார சாஸ்திரம் ஆகியவற்றைப் பிள்ளை அவர்கள் கற்றார்கள்.

## கல்விப் பணி

சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நடாத்தப்பட்டுவந்த வித்துவான் பரீட்சையில் வெகு திறமையாகச் சித்தியெய்தினார் சுப்பையாபிள்ளை அவர்கள். இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் மட்டுமன்றிச் சமஸ்கிருத இலக்கண இலக்கியங்களிலும் தமது திறமையைக் காட்டவேண்டும். வடமொழியும், தமிழும் வல்ல வித்துவான் அவர்கள் விவாகத்தின் பொருட்டு இலங்கைக்கு வந்தார்.

கொழும்பில் வசித்த யாழ்ப்பாணம் திரு. ம. தம்பியப்பா உபாத்தியாயரின் மகளான அன்னபூரணி அம்மாளைத் திருமணஞ் செய்தார். 1921ஆம் ஆண்டு வித்துவான் பட்டம் பெற்ற பிள்ளை அவர்கள் இந்தியாவிலுள்ள சீர்காழி சபாநாயக முதலியார் உயர்தர கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகக் கடமை செய்து கொண்டிருந்தார். இலங்கையில் திருமணம் செய்தபின்னர் வண்ணார்பண்ணை நாவலர் சைவபபிரகாச வித்தியாசாலையின் முகாமையாளர் த. கைலாசபிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற காவிய பாடசாலையில் பேராசிரியராகப் பணி புரிந்தார். பின்னர் நாவலர் உயர்தர பாடசாலையிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றினார். பின்னர் 1-10-26 தொடக்கம் 31-8-27 வரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஒரு வருடப் பயிற்சி பெற்றார். 1-9-27 தொடக்கம் 31-8-28 வரை கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலையிலும் 1929-1931 வரை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலும் பணிபுரிந்தார். இரண்டு ஆண்டுகள் தட்டாதெரு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். 19-9-35—31-3-59 வரை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராகச் சேவை செய்து ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

## தமிழ்ப்பணி

வித்துவான் அவர்கள் தம் ஓய்வு நேரங்களில் தன்னலமற்ற தமிழ்ப் பணி புரிந்து வந்தார். கோப்பாய், வேலணை, வண்ணார்பண்ணை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, ஆகிய இடங்களில் பால பண்டித, பண்டித வகுப்புக்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். தமிழ் கற்க விரும்பிய வழக்கறிஞர்களும் ஆசிரியர்களும் இவரின் வீட்டிற்குச் சென்று கற்று வந்தார்கள்.

வித்துவான் அவர்கள் பல தமிழ் இலக்கிய நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டார். சில நூல்களைப் பதிப்பித்தார். இவரின் உரை நூல்களாவன, பாரதம் பழம் பொருந்து சருக்க உரை, புதிய தமிழ் இலக்கிய கோவையுரை, குசேலோபாக்கியான உரை, இலக்கியத் திரட்டு உரை, கிருஷ்ணன் தூதுச் சருக்க விசேட குறிப்புரை, கும்பகர்ணன் வதைப்படல உரை, கம்பராமாயணம் சுந்தர காண்ட உரை,

1936 இல் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் வெளியிட்ட தஞ்சைவாணன் கோவை சொக்கப்ப நாவலர் உரை என்ற நூல் ஏட்டுப் பிரதியிலிருந்து இவரால் பரிசோதிக்கப்பட்டு விளக்கக் குறிப்புடன் பதிப்பிக்கப்பட்டது. இப் பதிப்புப் பற்றி மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழில்' பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

''இரு மொழிப்புலமையுடைய இதன் பதிப்பாசிரியர் வித்துவான் ந. சுப்பையா பிள்ளை அவர்கள் தம் நுண்ணிய ஆராய்ச்சித் திறமையால் இப்பதிப்பு அடைந்துள்ள சீர்திருத்தங்கள் மிகப் பல... தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனார் களவியல், அகப்பொருள் விளக்கம் முதலியவற்றுள் காணும் பொருள் முடிபுகளின் ஒற்றுமை வேற்றுமைகளும், உள்ளுறை உவமம் இறைச்சிப் பொருள் என்பவற்றின் இலக்கண வேறுபாடுகளும் இதில் நன்குவிளக்கம்பெற்றுள்ளன.''

வித்துவான் அவர்களின் இலக்கணத் திறமை பற்றிப் பண்டிதமணி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்: '' உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் தம் மாணவரும் வட மொழியும் தென்மொழியும் வரன்முறை பேணிப் படித்தவருமான வித்துவான் ந சுப்பையாபிள்ளை அவர்களை இங்கே (காவிய பாடசாலைக்கு) அனுப்பி வைத்தார்கள். வித்துவான் அவர்களை நான் காணவில்லை. அவர்களுடைய இலக்கண இலக்கியத் திறமைகளையே முதலில் கண்டேன் கண்டதும் மழை முகில் கண்ட மயில்போலவானேன். வித்துவான் அவர்களின் இலக்கணத்திறமைக் கண்ணுற்ற எனக்குப் பரீட்சையின் ஆசைபோய் சேனாவரையம், சூத்திரவிருத்தி, சூறாவளி, இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம், தருக்க சங்கிரகம் என்பவைகளை

—7-ஆம் பக்கம் பார்க்க

● பூட்டான் மாநாடு

# யார் இந்த குமாரசாமி?

பூட்டான் மகாநாட்டிற்குச் செல்லும் குழுவில் கடைசி நேரத்தில் இடம்பெற்ற தமிழ்-ஆங்கில சமகால மொழி பெயர்ப்பாளர் திரு. செ.குமாரசாமி யார்? ''ஈழமுரசு'' அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பதைப் பறைசாற்றியது. ''அளவெட்டியைச் சேர்ந்த குமாரசாமி...''

அளவெட்டி கலைக்கும் கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், அறிஞர்களுக்கும் புகழ் பெற்ற இடம். பிறந்தவர்களும், புகுந்தவர்களும் அளவெட்டியின் பெருமைக்கு அணி சேர்த்தனர்.

அளவெட்டி வடக்கு கூத்தஞ்சீமாவைச் சேர்ந்த திரு. செல்லையா குமாரசாமி அவர்கள் இலங்கை நாடாளுமன்ற தமிழ்- ஆங்கில சமகால மொழிபெயர்ப்பாளர்.

மாணவப் பருவத்தின் தொடக்க காலத்தை யாழ்ப்பாணம் ஹில்னர் கல்லூரியில் ஆரம்பித்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தொடர்ந்தார். வகுப்பில் என்றும் முதல் மாணவனாக இருந்த குமாரசாமி அவர்கள் லத்தீன், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். வாசிப்பதில் அதி ஆர்வம்-பரந்த அறிவைப்பெற உதவியது. விஞ்ஞானத்தில் தேர்ச்சி, விளக்கம் வைத்திய கலாநிதி ஆகவேண்டும் என்ற முயற்சியால் கிடைத்தது. ஆனால் அவர் வைத்தியக் கலாநிதி ஆகவில்லை. ஆகியிருந்தால் இன்று ஒரு சிறந்த தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்பாளனை தமிழர், இலங்கையர், ஈழத்தவர் இழந்திருக்கலாம்.

ஸ்கந்தா ஒறற்றர் சுப்பிரமணியம், ஈழநாடு ஆசிரியர் திரு. சபாரத்தினம் ஆகியோரின் அபிமான மாணவனாகத் திகழ்ந்த இவர், சிலகாலம் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

சிங்களம் மட்டும் சட்டம் காரணமாக நாடாளுமன்றம், செனற்சபைக்கு சமகால மொழிபெயர்ப்பாளர்தேவைப்பட்டனர். தமிழரசுக் கட்சியின் அன்றைய பேச்சாளப் பீரங்கியாகவும், தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் வலது கரமாகவும் விளங்கிய செ. குமாரசாமியவர்கட்கு மேற்படி பதவி கிடைக்க அவரின் ஆங்கில தமிழ் ஆற்றல் வழிசெய்தன. பட்டதாரியல்லாத செ. குமாரசாமியவர்கள் சிறப்புப் பட்டதாரிகளுடன் போட்டியிட்டு சமகால மொழிபெயர்ப்பாளரானார்.

1961ல் அவர் செனற்சபையில் சமகால மொழிபெயர்ப்பாளராக நியமனம் பெற்றார். சமகால மொழிபெயர்ப்பென்பது ஓர் அசாதாரண வேலை. உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்த்துக் கொண்டேயிருத்தல் வேண்டும். சமகால மொழிபெயர்ப்புக்கு வெறும் மொழி ஆற்றல் மட்டும் போதாது; ஒருவர் ஒரு வசனத்தைச் சொல்லி முடித்தபின் அதை மொழிபெயர்த்துச் சொல்வது வேறு-தொடர்ந்து பேசிக் கொண்டேயிருக்க தொடர்ந்து அதை வேறு மொழியில் சொல்லிக்கொண்டிருப்பது வேறு. அதற்குப் பலவேறு திறமைகள் சமகாலத்தில் தொழிற்பட வேண்டும். இதனால் தான் செனற்சபை கலைக்கப்பட்ட பின்னரும் நாடாளுமன்றம் இவரின் சேவையை விரும்பிப் பெற்றுக் கொண்டது.

★ ஏ.எஸ்.மகாலிங்கம்

இவரின் மொழிபெயர்ப்பாற்றல் நாடாளுமன்றத்திற்கு வெளியேயும் விசேட சந்தர்ப்பங்களில் பிரயோசனப்பட்டிருக்கிறது. வான மண்டலத்தியல் கண்டு தெளிய முற்பட்ட அமெரிக்கா ''அப்பல்லோ''வில் மனிதனைச் சந்திரனுக்கு அனுப்பிய சந்தர்ப்பத்தில் நேர்முக வர்ணனை செய்து ஒலிபரப்பியது; ஆங்கிலத்தில நடைபெற்ற இவ்வர்ணனையை இலங்கை வானொலி அஞ்சல் செய்தபொழுது அதிவேக உரையாளர் செ. குமாரசாமி அவர்களின் சேவையை இலங்கை வானொலி பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து இவரன்புக்குரியவர்களால் 'அப்பல்லோ குமாரசாமி' என்று அழைக்கப்பட்டார். அதே போல் ஆரம்பகாலத்தில் கம்யூனிச சிந்தனையுடன் வளர்ந்ததால் 'கம்ரேட்' 'கும்மி' என்றும் அழைக்கப்பட்டார். இதே புனைபெயர்களில் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுவதுமுண்டு.

இலங்கையில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாடு, சர்வகட்சிமகாநாடு ஆகியவற்றில் இவர் புரிந்த மொழிபெயர்ப்புச் சேவை பலரின் பாராட்டையும் பெற்றது.

பூட்டான் மகாநாட்டிற்கு தமிழ்- ஆங்கில மொழிபெயர்ப்பாளராகச் சென்றமை இன்றைய மொழிபெயர்ப்பாளர்களில் முன்னணியில் நிற்கின்றார் என்பதைத் தெள்ளிதிற் புரிய வைக்கிறது.

# பணத்துக்காக திருமணம்; ஹிட்லரே மணவிழா தோழன்

## அண்டப்புளுகன் கோயபல்ஸ் 8



கோயபல்ஸ்

கோயபல்ஸ் பெர்லினில் நாசிக்கட்சியை வளர்க்க மும்முரமாகப் பாடுபட்டுக்கொண்டிருந்த சமயத்தில் "ப்ருஸ்டீஜர்" என்ற அம்மையார் ஒருவரின் பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தான். கூட்டம் நடத்தக் கூடிய விசாலமான கூடமே அந்த வீட்டில் இருந்தது.

பருஸ்டீஜர் அம்மையார் கட்சியை வளர்க்க, இவனுக்கு வேண்டிய உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்தவர். இவரிடம் இரண்டு வேலைக்காரப் பெண்கள் இருந்தனர். இருவரில் ஒருத்தி மிகவும் அழகானவள். ஆடவரை நிலை தடுமாறச் செய்யும், அசாத்தியமான பேரழகு. வேலையின் நிமித்தம் இந்த வெறியன் தங்கியிருந்த அறைப்பக்கம் அவள் அடிக்கடி வருவாள். ஒரு நாள், கூட்டிப் பெருக்குவதற்காக இவன் தங்கியிருந்த கூடத்திற்கு இவள் வந்தாள். ஏழ்மையில் ஒளிந்துகொண்டிருந்த அவள் எழிலை, இவன் இமை கொட்டாது ரசித்தான். பின்னர் இலேசாகச் சிரித்தான்; அவளை அழைத்தான், தன் கருத்தைச் சொன்னான். இவன் கேட்டதை அவள் புரிந்ததும், கையிலிருந்ததைத் தூக்கிக் காட்டிவிட்டு அவள், வெளியே புறப்பட்டாள். ஆனுல் கோயபல்ஸ் அவளைப் போகவிடவில்லை. எட்டிப் பிடித்தான்; கட்டி அணைத்தான். அவள் இதைத் தடுத்தாள்; இவன் அவளைக் கெடுத்தான்.

மானத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பேதைப் பெண்ணின் மென்மையான பெண்மையை, இந்த மனித மிருகம் தன் அடங்காப் பசிக்கு இரையாக்கிவிட்டு, அடங்கிவிட்டது.

தேனீக்கள் போல: எந்த நேரமும் மிகச் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கும் பெர்லின் நகர நாசிக்கட்சியின் தலைமை நிலைய அலுவலர்கள், சில நட்களாகவே மந்தமும், மயக்கமும் நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர். வேலையைவிட்டு அவர்கள் விழிகள் வேறுபக்கம் திரும்புகிற தென்றல், இனியகனவொன்று கால்பெற்று நடப்பதுபோல், அந்தப் புதிய பூம்பாவை அவர்களின் கண் பட்டுப் போய்க் கொண்டிருப்பாள். அவள், அந்த அலுவலகத்திற்கு வேலைக்கு வந்து சில தினங்களே ஆகியிருந்தன. ஆனுலும் அவளைக் கண்டு ஆச்சரியப்படாத கண்களே அங்கே இல்லை.

"அவள் மணமானவளாக இருப்பாளோ" இப்படிச் சில உள்ளங்கள் மனமுடைந்து வருந்தின. "இருக்காது – அவ்வளவு வயதா அவளுக்கு ஆகியிருக்கும்" இப்படியும் சில உள்ளங்கள் ஆறுதலடைந்து அமர்ந்தன. பார்ப்பதற்குப் பதினாறு வயதுப் 'பருவ மங்கை' போல் பறந்து திரிந்து பணியாற்றிக்கொண்டிருந்த அவள், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே 'ஹனிமூன்' கண்ட 'அனுபவக் களஞ்சிய'மொன்று அப்போது அவர்களில் யாருக்கும் தெரியாது. இப்போது அவள், ஹரால்டு என்ற பத்து வயதுப் பையனுக்கே தாய். நாசிக்கட்சியின் அலுவலகத்திற்குப் புதிதாக வந்திருந்த அந்த நங்கையின், பெயர், 'மக்தா' என்பதாகும்.

அவளின் அழகை மட்டுமே பற்றிப் பலர் அதிசயப்பட்டுக் கொண்டிருந்த இந்த வேளையில், அவளைப்பற்றிய அனைத்தையுமே அறிந்துகொள்வதில் ஆர்வமும், அக்கறையும் காட்டிய கோயபல்ஸ், தெளிவாகத் தெரிந்துகொண்டதும், ஒரு திட்டமான முடிவுக்கு வந்துவிட்டான்.

மயக்கும் கண்கள் கொண்ட 'மக்தா' என்ற அந்த மங்கை, பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னா ஒரு பெரிய தொழிலதிபரைத் திருமணம் செய்து கொண்டாள் அவருக்கு ஒரு மகனையும் பெற்றுள். அதோடு அவர்கள் உறவு முறிந்து அவள் 'விவாக ரத்து'ச் செய்து கொண்டாள். அவளின் மாஜிக் கணவரோ, இப்போது அவளுக்கு மாதா மாதம் 4000 மார்க்குகள் 'வாழ்க்கைப் பணம்' கொடுத்து வந்தார்.

அப்படிக் கிடைத்த பெருந்தொகையும், இப்போது அவளிடம் இருந்தது. நவநாகரிகமான பொருட்களை உபயோகித்து, தன்னை மிக நாகரிகமாக அலங்காரம் பண்ணிக் கொள்வதல், இவளுக்கு வெகு

### 'தி' எழுதுவது

பிரியமுண்டு. இவளின் அன்னையோ, மூன்று திருமணங்கள் மட்டுமே செய்துகொண்ட "முழுப் பதிவிரதை". விவாகரத்துச் செய்துகொண்ட இந்த மக்தா, மாணவன் ஒருவன மீது 'மையல்' கொண்டிருந்தாள் இடைக்காலத்தில். பிறகு அதை மாற்றிக் கொண்டாள்.

அந்த மக்தாவை, அவளிடமிருந்த கணிசமான தொகைக்காக 1931-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ந் தேதி ஆடம்பர வாத்தியம் முழங்க, குதிரை ஊர்வலம் அணிவகுக்க மிக கோலாகலமான முறையில் திருமணம் செய்து கொண்டான் இந்தக் கோயபல்ஸ். ஹிட்லர் இவனுக்கு மாப்பிள்ளைத் தோழனாக இருந்து இதைச் சிறப்புற நடத்தி வைத்தான். இவளை, இந்த மக்தாவை, கோயபல்சின் குருநாதனை அடால்ப் ஹிட்லர் அடைய விரும்பியதாகவும், அதிகார பூர்வமான செய்தி இருக்கிறது. ஆனுல் மக்தா ஹிட்லரை மாலை சூட்டி மணாளனாக ஏற்றுக் கொள்ளாத அந்த ஒரு குறையைத் தவிர, அவன் மனம் கோணும்படி, அவன் விருப்பத்திற்கு மாறாக ஒரு நாள் கூட அவள் நடந்ததில்லை.

கோயபல்சை மணந்து கொண்ட பின்னரும், மக்தா ஹிட்லரின் மனதிற்கிசைந்தவளாய், அவன் மையலைத் தீர்ப்பவளாய் இருந்தாளென்ற செய்தி, உலகறிந்த உண்மைகளில் ஒன்று.

சட்டமோ திட்டமோ, கூட்டமோ மாற்றமோ, கொள்கையோ சதியோ – பிரச்சினை எதுவாக இருப்பினும், பெரும்பாலும் அதைப்பேசி முடிவு செய்யும் நிரந்தரமான இடமாக, கோயபல்ஸ் மக்தாவைத் திருமணம் செய்து கொண்ட பின்னர், அவள் வீட்டையே பயன்படுத்தி வந்தான் ஹிட்லர். நெருக்கடியான அரசியல் அமளிகள் நிகழ்ந்த நேரங்களில் கூட, தொடர்ந்து சில மாதங்களையே அவன் கோயபல்சின் வீட்டில் கழித்திருக்கிறான். ஹிட்லர் தனது இல்லத்தில் தங்குவதில் மக்தா அடைந்த மகிழ்ச்சி அதிகம்.

கோயபல்சை அவள் மணந்து கொண்டபின்னர், அவளின் மாஜிக் கணவன்

—6-ஆம் பக்கம் பார்க்க

## சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா

# தெணியானின் "சொத்து"

❤ தொகுப்பு : கோவிநேசன்

சிறுகதை ஆசிரியராக 1964-ல் எழுத்துலகில் அடி எடுத்து வைத்த தெணியான் "விடிவை நோக்கி" "கழுகுகள்" என்னும் இருநூல்களின் மூலம் நாவலாசிரியராக நன்கு அறிமுகமானவர். இதுவரை 85 சிறுகதைகளுக்கு மேல் படைத்திருக்கும் தெணியானின் சிறுகதைத் தொகுதியொன்று இருபதாண்டு காலகட்டத்தில் வெளிவராதிருந்துவந்தமை பெருங்குறையே. இந்தக் குறையினைப் போக்கும் வண்ணம் தெணியானின் 10 கதைகளைக் கொண்ட "சொத்து" என்ற தொகுதியினை தமிழ் நாட்டு என். ஸி. பி. எச். நிறுவனம் சென்ற ஆண்டின் இறுதியில் வெளியிட்டுள்ளது. அத்தொகுதிக்கான அறிமுக விழா வதரி வடக்கு அ. மி பாடசாலை இலக்கிய மன்றத்தினுல், பாடசாலை மண்டபத்தில் அதிபர் செ. சதானந்தன் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் "சொத்து" பற்றி வழங்கப் பெற்ற கருத்துரைகள்:

திரு சி. க. இராசேந்திரன்:

தெணியான் வெறும் பொழுது போக்காக எழுதுகின்ற ஒரு எழுத்தாளர் அல்லர். அவர் தமக்கென்றொரு இலட்சியத்தை வாழ்க்கையில் கொண்டுள்ளவர். அந்த இலட்சியமே அவரது இலக்கிய சிருஷ்டிகளின் இலட்சியமுமாகும். தெணியான் தமது சொந்த வாழ்க்கையில் சொத்துச் சேர்த்துக் கொள்ளத் தெரியாதவர். இலக்கியத்தையே தமது சொத்தாகக் கொண்டுள்ளவர். அதனுல்தான் போலும் தமது முதலாவது சிறுகதைத் தொகுதிக்குச் "சொத்து" என்று பெயர் சூட்டியுள்ளார்.

திரு செ. பேரின்பநாயகம்:

தெணியானின்படைப்புகள் நிலவுடைமைச் சமுதாயத்தை உடைத்து அழித்தொழிக்கும் நோக்கம் கொண்டவை. அத்தகைய நோக்கினை உடைய திரு டானியல் அவர்களிடம் இத்தொகுதிக்கான அணிந்துரையைப் பெற்றுள்ளார். டானியல் தயக்கத்துடன் இத்தொகுதிக்கான அணிந்துரையை எழுதி இருப்பது போலத் தோன்றுகிறது. அதற்கான காரணம் எதுவாக இருந்தாலும்டானியலிடம்அணிந்துரையைப் பெற்றுக் கொண்ட தெணியானின் துணிச்சல் பாராட்டுதலுக்குரியது. இத்தொகுதியின் தலைப்பாக அமைந்துள்ள "சொத்து" என்ற சிறுகதை என்னை மிகவும் கவர்ந்ததாகும். பெற்றோர் தம்பிள்ளைகளுக்கு தேடிவைக்கவேண்டிய சொத்து வெறும் பொன்னும் பொருளுமல்ல. அதற்கப்பால் பிறருக்குதவுகின்ற நல்ல மனிதர்களாக வாழ்ந்து போவதுதான் அழியாத சொத்தென்பதனைத் தெளிவாக கலைத்துவத்துடன் வெளிப்படுத்தியுள்ளார்.

திரு. த கலாமணி:

இது தெணியானின் முதலாவது சிறுகதைத் தொகுதியாக வெளிவருகின்றது இத்தொகுதியினை அறிமுகம் செய்வதற்கு முன்னர் தெணியானை அறிமுகம் செய்து வைக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். தெணியான் என்ற எழுத்தாளர் பலராலும் அறியப்பட்டவராக இருக்கலாம். ஆனுல் எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட்டார் என்று என்னுல் சொல்ல முடியவில்லை; எங்களைச் சார்ந்தவர்களைப் பற்றி எங்களுள் பலருக்குத் தெரிவதில்லை. முற்போக்கு எழுத்தாளர்களுள் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர் என்று பிரபல விமர்சகர்களால் குறிப்பிடப்படுவர். முதலாவது, இரண்டாவது தலைமுறையினரின் படைப்புகளில் பிரசாரத்தன்மை மேலோங்கி இருப்பதைக் காணலாம். இத்தகைய குறைபாட்டினைத் தெணியானின் இத்தொகுதியில் காணமுடியாது.

திரு. கருணையோகன்:

சொத்து என்னும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் கலை உலகு, கல்வி உலகு, சாதியமைப்பு வர்க்கபேதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன. இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புக்கள் சாதிப்போராட்டம், அல்லது தொழிலாளர் போராட்டம் பற்றியே இருக்குமென்பது தமிழ் நாட்டு விமர்சகர்கள் சிலரது கருத்தாகும். இக்கருத்தினை நிராகரிக்கும் தொகுதியாகவே தெணியானின் இத்தொகுதி விளங்குகின்றது இத்தொகுதியில் இடம் பெறும் படைப்புக்கள் யதார்த்தமானவையாகவும் கலைத்துவமானவையாகவும் விளங்குகின்றன. தமிழ் நாட்டு எழுத்தாளர்களான ஜானகிராமன், ராஜநாராயணன் போன்றோரது படைப்புக்களில் மறக்க முடியாத பாத்திரங்கள் என்று சில இடம் பெற்றுள்ளன. அந்த வகையிலே தெணியானின் 'வயிறிலிருந்தும் வாயில்லாதவன்' என்ற கதையின் பாத்திரமான 'ஆசை மீசைக் கந்தையா' மறக்க முடியாத ஒரு பாத்திரமாகும். இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான கதைகள் ஒரு நாவல் அல்லது ஒரு குறுநாவலுக்குரிய பரந்த காலத்தைத் தம்முட்கொண்டுள்ளன.

திரு க. தங்கவடிவேல்;

தெணியானின் 'சொத்து' என்ற சிறுகதைத் தொகுதிக்கான கதைகளைத் தெரிந்தெடுத்துக் கொடுத்து, இத்தொகுதி பிறப்பதற்கான மருத்துவிச்சியாக இருந்தவன் நான். இத்தொகுதியில் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய கதைகள் இடம்பெற்றுள்ளபோதும்வர்க்கப்பார்வைதம்முட்கொண்ட கலைத்துவமான படைப்புகள் இவை. தெணியானின் ஆசிரியராக இருக்கின்ற காரணத்தினுலே என்னவோ அவரது படைப்புக்கள் இலக்கிய நடையுள்ளவையாக அமைந்துள்ளன. சாதிக்கொடுமைகள் எங்கெல்லாம் தலைவிரித்தாடுகின்றதோ அங்கெல்லாம்டானியல், ஜீவா. தெணியான் போன்றவர்களின் பேனைகள் நன்கு கூராக விளங்குகின்றன. அண்மையில் 'ஈழமுரசு' வெளியிட்டுள்ள தெணியானின் "காலத்தால் சாகாதது" என்ற சிறுகதை இதற்கொரு சான்று. அண்மைக்காலத்தில் நான் படித்த சிறந்த கதை என்று அக்கதையைச் சொல்லலாம். விமர்சகர்கள் எதனையாவது சொல்லிக் கொண்டிருக்கட்டும் மக்கள்தான் மக்கள் எழுத்தாளர்களின் உண்மையான விமர்சகர்கள், இன விடுதலைக்கான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்திலும் சாதியின் கொடுமை கோரத் தாண்டவம் ஆடுகின்றதென்றுல் தெணியான் சாதிக் கொடுமைபற்றியே எழுத வேண்டும். டானியலுக்கும் தெணியானுக்கும் அரசியல் அடிப்படையிலான முரண்பாடு உண்டு, ஆனுல் இலக்கிய நோக்கில் சாதிக் கொடுமைக்கான போராட்டத்தில் இருவரும் ஒரே நோக்கத்தினை உடையவர்கள்,

தெணியான் தனது பதிலுரையில் இவ்வாறு கூறினுர்;

இந்த நாட்டில் முற்று முழுதாக அடக்கி ஒடுக்கப்பட்டு சுதந்திரமற்று வாழுகின்றவன் எழுத்தாளன். எழுத்தாளன் சிந்திக்கின்றவற்றை எல்லாம் சுதந்திரமாக எழுதுவதற்கு முடியாது. அப்படி எழுதினுலும் எழுத்தாளனுடைய பாதுகாப்புக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. இன்றைய காலகட்ட நிகழ்ச்சிகள் ஈழத்தில் உன்னதமான இலக்கியங்கள் தோன்றுவதற்கு வாய்த்துக்கள். ஆனுல் இந்தச் சந்தர்ப்பத்தில் எழுத்தாளன் சிந்திக்கின்றவற்றை எல்லாம் எழுதிவிட முடியாது. சுதந்திரமாக எழுதுகின்றேன் என்று எதனையாவது எழுதிவிட்டு, இன்னொரு நாட்டில் ஓடிப்போய்த் தஞ்சமடைவதைவிட, துன்பப்படும் இந்த மக்களோடு மக்களாக வாழ்ந்து விடுவதே மேல்.

எழுத்தாளன் இன்றைய அவலங்களை எழுதாமல் இருக்கிறுனே என்று குற்றம் சாட்டுவது நியாயமல்ல. எழுத்தாளன் என்பவன் ஒரு செய்தி

—6-ஆம் பக்கம் பார்க்க

# பெண் மனைவிளக்கு மட்டும் தானா?

★ திரேஷ்ராணி
★ அமிர்தராணி
★ ஜெயராணி

"உலகில் பெண்களே மனை விளக்கு" என்ற பொருள் செறிந்த வாசகம் இன்று சூசகமாக பெண்ணடிமைக்கு வித்திட்டு – பெண்ணுரிமைக்குக் குத்திட்டு நிற்கிறது. "ஆணுக்கு உலகமே வீடு, பெண்ணுக்கு வீடே உலகம்" என்ற போக்கில் மனை; மகவு என்ற குறுகிய வட்டத்துக்குள் பெண்ணின் உறவுகளை விலங்கிட்டு கட்டும் நோக்கத்திலே இந்த "மனைவிளக்கு" என்ற பதப்பிரயோகம் சில வேளைகளில் பொருள் கொடுக்கிறது.

மனைவிர் எல்லோரும் பெற்றோர், கணவர், பிள்ளை, உறவினர், சுற்றத்தார், ஏன் தேவர் பிதிரர், என்று பல்திறப்பட்டோரையும், வாழ்க்கையாலும், வார்த்தையாலும், ஆதரித்து அவர்களனைவரும் தத்தம் பாதையில் சீராக அடியெடுத்து வைக்கவும்– ஆளாகவும் பின்னின்று முன் தள்ளுகின்றாள். உரிமை என்ற உள்ளுணர்வோடு பம்பரம் போலப் பன்னரிய பாடுகளைச் சுமந்து சுமைதாங்கியாகவும் திகழுகின்றாள். இவையெல்லாம் அவள் இல்லத்துக்குள் செய்யும் இல்லறைக் கடமைதான் என்றாலும் பெண் என்பவள் மனைவிளக்கு மட்டும் தானா? இல்லை உலகின் பல்திசைப் பட்ட கோணத்திலும் பல் திறப்பட்ட வளர்ச்சியிலும் இன்று பெண் பங்கேற்று நிற்கின்றாள்.

இன்றைய உலகின் அதியுயர் விதானத்திலுள்ள பெண்மணி அன்னை திரேசாவின் பொது நலப்பணியினூடு பெண்ணின் பிறரன்பு, தியாகம், பொறுமை, தாழ்ச்சி, இரக்கம் என்னும் உயர்ந்த சீலங்கள் தொனிக்கின்றன; இனம், மொழி, மதம், நிறம், ஆகிய மனிதனின் வெளியடையாளங்களில் இவள் வேறுபாட்டைக் காணவில்லை. உள்ளோடும் இரத்தத்திலும், உள்ளத்திலும் ஒற்றுமையின் உயர்வைக் கண்டாள். பொது நலத்தின் அச்சாணியாக விளங்கும் இவளின் பணியின் சிறப்பு பெண்ணை ஒரு பெருந்தியாக விளக்காகவே காட்டுகின்றது.

உலகின் முதற் பெண் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா, முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி அமரர் இந்திராகாந்தி, இரும்புப் பெண் என எல்லோராலும் அழைக்கப்படும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்கிரட் தட்சர் போன்றோர்கள் பெண்கள் வரிசையில் அரசியற் பீடத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்த –பிரகாசிக்கும் சில அதிகார விளக்குகள்,

"பெண்ணதிகாரம் கொண்ட நாடு உருப்படாது' என்ற பெண்ணடிமைக் காலம் போய், பெண்ணதிகாரம் ஒரு பொன்னதிகாரம் என்ற பெண்ணுரிமைக் காலம் வந்து விட்டது. வீட்டின் நிர்வாகத்தை விளக்கொளியில் படித்தவள், இன்று நாட்டையே நிர்வகிக்கும் அதிகார விளக்காகத் திகழ்கின்றாள்.

வேற்று நாட்டில் தன் கணவன் மாற்றான் கையால் அநியாயமாக கொலை செய்யப்பட்டதை கேள்வியுற்ற கண்ணகி வீட்டில் அடங்கியிராது தன் கணவன் சார்பில் கொற்றவனையே குற்றவாளிக் கூண்டில் ஏற்றிய வீர விளக்காகத் திகழுகின்றாள். இந்த கண்ணகி வரிசையில் இன்னும் எத்தனையோ "வீரவிளக்குகள்" இன்னும் ஒளி வீசிக் கொண்டேயிருக்கின்றன.

சபையோர் மத்தியில் பறிபோக விருந்த தன்மானத்தை இறைபத்தியால் தடுத்து நிறுத்திய அந்தப் பாஞ்சாலி என்னும் பக்தி விளக்கினை நாம் மகாபாரதத்தில் சந்திக்க வில்லையா? இதைப்போல இன்னும் எத்தனையோ பக்தி விளக்குகள் இன்றும் எம் சமுதாயத்தில் இல்லையா?

எது எப்படி இருப்பினும் இருள் பரந்த இப்பாரில் மூலை முடக்கெல்லாம் நின்று ஒளி வீசும் இந்தப் பெண் என்னும் பெருஞ் சுடருக்கு மனை விளக்கு என்ற பதம் மட்டும் போதுமா? இல்லை அவள் பாரின் பல்வேறு விளக்கு. இந்த விளக்கின் ஒளியிலே உலகம் ஒரு விளக்கமான ஒளியினையும் வழியினையும் காணப் போகின்றது.

## கருவறைகள்

சிறைக்கூடங்களும்
சித்திரவதை முகாம்களும்
விடுதலை உணர்வுகளின்
மரணப் படுக்கைகளாய்
என்றுமே
இருந்ததில்லை.

— யோ. பெ. —

## சிறுகதை....

—5–ம் பக்கத் தொடர்

நிருபரல்ல, உடனுக்குடன் தகவல்களை இலக்கியமாக்க வேண்டியதுமில்லை, காலம் கனிந்து வரும் போது இன்றைய வாழ்வு நாளை இலக்கியமாகவே உருவாகும். என் போன்ற எழுத்தாளர்களுக்கு பெரியதொரு சமூகக் கடமையும் உண்டு. இன்றைய கால கட்டத்திலும் சாதிக் கொடுமைகள் காலத்துக்கேற்ற வண்ணம் கூர்மைப்பட்டு கொடுமை புரிவதை நாம் காணுகின்றோம் இந்தக் கொடுமைகள் எல்லாம் அழிந்து விட்டனவென்று இவற்றைக் கணக்கிலெடுக்காதவர்கள் பார்வையில் இவைபடப்போவதில்லை. ஆனால் எம்போன்றவர்கள் அப்படி இருந்துவிட முடியாது. எனவே இந்தக் கொடுமைக்கெதிராக என்று என் பேனாவைப் பயன் படுத்துவேன். இது ஒன்றுதான் சமூகத்தின் கொடுமை என்றும் நான் கருதவில்லை; கொடுமைகள் எந்த வடிவத்தில் தோன்றினாலும் அதனை அழித்தொழிப்பதே எனது இலட்சியமாகும்.

## ★ ஒரு கண்ணோட்டம்

# 'மழை' – நாட்டிய நாடகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரித் தமிழ் மன்றத்தினர் நடாத்திய தமிழ் விழாவின் நிகழ்ச்சிகளில் ஒன்றாக அமைந்த "மழை" என்ற தலைப்பிலமைந்த நாட்டிய நாடகம் அனைவரது கவனத்தையும் கவரத்தக்க நிகழ்ச்சியாகவே அமைந்திருந்தது.

இந்நாட்டிய நாடகம் காலத்தின் இரசனைத் தன்மைக்கேற்பத் தேர்வு செய்யப்பட்ட, கலை இலக்கியத்துறைக்குப் புதியதொரு ஆக்கமாகவே காணப்பட்டது.

பொதுவாக பாரம்பரிய நாட்டிய நாடகங்களில்புராண இதிகாசக் கதைகளே உள்ளடக்கமாக இருத்தல் மரபு. அவற்றில் கடவுளரும், காவியத் தலைவர்களும், அரசர்களுமே பாத்திரங்களாக வருதலும் வழமை.

**வள்ளுவன்**

ஆனால் "மழை" நாட்டிய நாடகத்தில், ஒரு சிறு மழைத் துளியும் காணாமல் வரட்சி வதங்கி ஆண்டாண்டு காலமாக துயருற்று வாழும் மனிதக் கூட்டமொன்று தனது சுயமுயற்சியினால் மழையை மண்ணுக்குக் கொண்டு வருகின்றது.

இதனால் மண் செழிக்கிறது. மக்களின் துன்பம் மறைகிறது. மக்கள் மனம் மகிழ்கிறார்கள் என்கின்ற செய்திகளை காட்சிகளாக்கி இரசிகர்களின் முன் கொணர்கின்றார்கள்.

இதில் துயருறும் மக்களாக, துணிவூட்டும் மக்களாக, இடியாக, மின்னலாக, மழையாக இன்னும் பலவாக பாத்திரங்கள் படைக்கப்பட்டு உலவ விடப்பட்டிருந்தன.

ஏனைய நாட்டிய நாடகங்களைப் போலவே பாத்திரங்களுக்குப் பரதமும் இணைக்கப்பட்டு, பின்னணியாக கர்நாடக இசையும், நட்டுவாங்கமும் சேர்க்கப்பட்டு புதிதாக வேறு பாடல்களும் கோர்க்கப் பட்டிருந்தது.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளின் நடிப்புத்திறன், நடனத்திறன், இசைத்திறன் என்பன இந்நாட்டிய நாடகத்தில் நன்கு வெளிப்படுத்தப் பட்டிருந்தன.

இதில் பங்கு பற்றிய மாணவிகளும், இந்நாட்டிய நாடகத்தைத் தயாரித்தளித்த கலாநிதி சி. மௌனகுருவும், நடனத்தையும் இசையையும் நெறிப்படுத்திய சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை பவானி சண்முகலிங்கமும் பாராட்டுக்குரியவராகின்றார்கள்.

இந்நாட்டிய நாடகத்திலும் தொடர்பான அறிமுகத்தில் மனித முயற்சியையும், எதையும் மக்களாற் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கையையும் வெளிக்காட்டுவதே நோக்கம் என்று கூறப்பட்டது.

ஆனால் அறிமுகத்தைக் கருத்தில் கொண்டு "மழை" நாட்டிய நாடகத்தைப் பார்க்கையில் அது அறிமுகத்திலிருந்து விலகியிருந்ததையே அவதானிக்க முடிந்தது!

ஏனென்றால் மழையைப் பொழிவிப்பதற்காக, மேற்படி மக்கள் கூட்டம் யாகங்கள் செய்து இறைவனை வேண்டுவதாகவே சித்தரிக்கப்பட்டிருந்தது. இக்காட்சி கடவுள் நம்பிக்கையை அல்லவா ஊட்டிவிடுகிறது? தன்னம்பிக்கையை ஊட்டுகிறதென்று எவ்வாறு கொள்ளமுடியும்?

எனவே மேற்படி நாட்டிய நாடகத்தின் அறிமுகம் தவிர்க்கப்பட்டிருக்கலாம் அல்லது நாட்டிய நாடகத்தையொட்டிய அறிமுகம் ஒன்று செய்யப்பட்டிருக்கலாம்.

மேற்படி அறிமுகத்தையே கருத்திற்கொள்வதாயின், வரண்ட பகுதிக்கு வேறொரு பகுதியிலிருந்து பலத்த போராட்டங்களுக்கு மத்தியில் நீரைக் கொண்டு வருவது போன்றதொரு காட்சியைச் சித்தரித்திருக்கலாம்.

'போராட்டங்கள்' என்று சொன்னால், வரண்டதொரு பாலைவனத்தைக் கடந்து, பாரிய மலைத்தொடர்களை ஊடறுத்தது ஏன்? அரசியல் கெடுபிடிகளுடன் நீரைக் கொண்டுவருவதாககாட்சியை அமைத்திருக்கலாம். இதற்கு உதாரணமாக மகாவலி நீரை யாழ் நீரேரிக்கு கொண்டு வருதல் என்ற சம்பவம் கொள்ளப்படலாம்.


நிறைவாக மக்களால் எதையும் செய்யமுடியும் என்கின்ற அறிமுகத்திற்கு, மெய்ஞ்ஞான ரீதியான காட்சிகள் ஆதாரமாக இருக்கமுடியாதென்பதே எனது கருத்து. இவற்றுக்கு விஞ்ஞான ரீதியான காட்சிகளே ஆணித்தரமான ஆதாரமாக முடியும்.

இருந்த போதிலும் கலை இலக்கியத்துறைக்குப் புதியதொரு அமைப்பினை ஆக்கித்தந்து ஆக்கபூர்வமான பணியொன்றைச் செய்த கலாநிதி சி. மௌனகுரு பாராட்டப்பட வேண்டியவராகின்றார்.

## உதயச்சந்திரனுக்கு

# தங்கப்பதக்கம் வழங்கி பீக்கிங் வானொலி கௌரவம்

பீக்கிங் வானொலி நிலையம் அகிலஉலக ரீதியில் நடாத்திய தமிழ்க் கட்டுரைப் போட்டியில் அரியாலை வாசியான வி. என். எஸ் உதயசந்திரன் முதற் பரிசினைப் பெற்றுள்ளார். திரு. திருமதி. என்.



செல்வரத்தினம் தம்பதிகளின் புதல்வரான இவர் ஹற்றன் சென். யோசப் கல்லூரி, யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவராவர், கொழும்பு விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவருக்கான முதற் பரிசிலான தங்கப்பதக்கத்தை பீக்கிங் வானொலிநிலையம் அனுப்பி வைத்துள்ளது.

உதயச்சந்திரன் வெரித்தாஸ் றேடியோவிற்குப் பல கட்டுரைகளை எழுதிப் பரிசில்கள் பெற்றுள்ளார். இவரின் பல ஆக்கங்களும் அதில் ஒலி பரப்பாகியுள்ளது. லண்டன் பீ. பீ. சீ. மாஸ்க்கோ வானொலிகளிலும் இவரின் கட்டுரைகள் ஒலி பரப்பப்பட்டுள்ளன. இலங்கை வானொலிக்கென பல நாடகங்களை எழுதியுள்ளார்.

தமிழ் ஒலி மன்றத்தின் முன்னோடி அங்கத்தவரான இவர் அதன் உப-செயலாளராகவும் இருந்துள்ளார். வயதில் குறைந்தவரான இவர் நல்ல கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்: இ. அரசகேசரி

## யாழினி மாம்பழம்

யாழ்ப்பாணத்தவருக்குப் பலநோக்கில் பயன்தரும பலவித மாமரங்கள் உறுதுணையானவை. வாழ்வளிக்கும் மாவினங்களை உற்பத்தி செய்வதில் மறுமலர்ச்சிப் பாதை அமைப்போம். ஒரு மரத்தில் பலவினங்களை ஒட்டுவதில் நிபுணர்கள் எங்களிடம் இருக்கிறார்கள். நாங்கள் யாழினி முதலிய பெயர்களில் கலப்பினங்கள் காண முயல வேண்டும். (மில்க்வைற் செய்தி)

## பணத்துக்காக....

—5–ம் பக்கத் தொடர்

மாதாமாதம் அவளுக்குக் கொடுத்துவந்த வாழ்க்கைப் பணம் 4000 மார்க்குகளை நிறுத்தி விட்டான் ஆடம்பரமாக வாழ்வதிலும், அனுபவிப்பதிலும் அதிகப் பிரியமுடைய மக்தாவிற்கு இப்பொழுது பணமுடை உண்டாயிற்று. ஆகவே அவள், ஹிட்லரை மட்டுமல்ல, இதர நாசிக் கட்சித் தலைவர்கள் சிலரையும் இரவில் தன் வீட்டிற்கழைத்து அவர்களுக்கு 'இன்பபோதை' கொடுத்து, மகிழ்வித்து, இழந்த பணவரவை சரிசெய்து கொண்டாள். அது மட்டுமல்லாது, ஹிட்லர் விரும்பிய நேரங்களிலெல்லாம் அவனுக்கு மிகவும் பிடித்தமான எழிலரசிகளைக் கொண்டு வந்து கொடுப்பதில் –ஹிட்லருக்கு இடது கையாக விளங்கியவளும் இவளேதான். பல்வேறு வழிகளில் எதிரிகள் ஹிட்லரைக் கொல்லச் சதி செய்த சமையங்களில், மக்தா –தானே சமைத்து எடுத்துக் கொண்டு சென்று கொடுத்தால்தான் ஹிட்லர் உணவே உண்பானும்.

எல்லோருக்கும் தெரியும் படியே, ஹிட்லரும் மக்தாவும் நடத்திய இந்தக் காதல் லீலைகளை, காரியப்புலியான கோயபல்ஸ் கடைசிவரைக் கண்டு கொள்ளவே இல்லை. கண்டிக்கவும் இல்லை. இந்த மக்தா, இது காணுதென்று இன்னும் இருவரோடு தொடர்பு கொண்டிருந்த செய்தியும் கோயபல்ஸ் வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. இப்படியொரு மனைவியைத் திருமணம் செய்துகொண்ட பின்னரும் கூட, கோயபல்ஸ் தனது 'திருவிளையாடல்' களை நிறுத்தவில்லை.

ஹிட்லர், ஜெர்மனியின் சர்வாதிகாரியாக மாறிய பிறகு, கலை, பிரசாரம், ஆகிய இரு துறைகளையுமே கண்காணிக்கும் அமைச்சனானான் கோயபல்ஸ். இந்தக்காலத்தில்' இவனது நிர்வாகத்தின் கீழ் வேலை செய்த பணிபட்ட பாவையர் கூட, இவனது கண்பட்டால் மீள்வது கடினம். 'மூக்கும் முழியுமாக' வேலைக்கு வந்த பெண்களையெல்லாம், இவன் சோலைக்கழைத்துச் செல்வதும் காதல் லீலைக்கழைத்துக் கொள்ளுவதுமாக இருந்ததை பதிந்த நாட்டு மக்கள், இவனைப் பலப்படப் பேசிப்பழித்தனர். (தொடரும்)

# நவக்கிரக தோஷ நிவர்த்திக்கு கோளறு பதிகம்

இந்நாட்டின் கிரகநிலைகள் யூலை 15ம் திகதியிலிருந்து ஆகஸ்ட் மாத முடிவுவரை நாட்டில் விபரீத விளைவுகளைத் தோற்றுவிக்கலாம் என்றும் ஆதலின் அனைவரும் அவதானத்துடன் இருக்கவேண்டுமென்றும், இக்காலத்தில் சாந்தியும், சமாதானமும் நிலவ மக்கள் எல்லோரும் தெய்வ நவக்கிரக வழிபாடுகளில் தினமும் ஈடுபட்டிருத்தல் வேண்டுமென்றும் பல சோதிட வல்லுநர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

கோள்களால் வரற்பாலனவாகிய துன்பங்களை அறுத்தற்கு திருப்பதிகங்களில் தலை சிறந்தது ''கோளறு பதிகம்''. நாள்களும் கோள்களும் இறைவன் ஆணையின் ஏவல் செய்யும் தன்மையன. பதிகங்கள் இறைவனுக்கு அர்ச்சனை செய்யும் பாக்கள் ஆகும்.

திருஞானசம்பந்தப் பெருமானுக்கு கோள் நிலைகள் நல்லனவாய் இல்லை என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறியபொழுது அந்நிலையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் வேதாரண்யம் என்னும் திருத்தலத்தில் பாடப்பெற்றது கோளறு பதிகம்.

இத்திருப்பதிகத்தில் ஒவ்வோர் பாட்டிலும் முதற்பகுதியில் இறைவன் தன்மையைச் சித்தரித்துப் பிற்பகுதியில் எமக்குத் துன்பம் தருவனவற்றைக் கூறி அத்துன்பம் துடைக்கும் வழி கூறப்பட்டுள்ளது.

இத்திருப்பதிகம் பதினொன்றையும் சைவப்பெருமக்கள் பொருளுணர்ந்து ஓதவேண்டுமென ''ஈழமுரசு'' ஆர்வம் கொண்டு சைவசமயச் சீலராய்த் திகழ்ந்த கயப்பாக்கம் கா. சதாசிவச் செட்டியார் அவர்களின் உரையின் அடிப்படையைக் கொண்ட விளக்கத்துடன் நாளை திங்கட்கிழமை (22ம் திகதி) தொடக்கம் ஒவ்வொரு பதிகமாக பிரசுரம் செய்யவுள்ளது. இக்கோளறுபதிகம் ஒவ்வொன்றையும் பக்தி சிரத்தையுடன் பொருளுணர்ந்து ஓதி சைவப்பெருமக்கள் நன்மை பெறுவார்களாக.

## பேச்சுவார்த்தை....

—3-ம் பக்கத் தொடர்

பட்சத்தீர்வு என்ற ஒன்றும் இல்லை.

போராளிகள் மீதான பயங்கரவாதிகள் என்ற பதப்பிரயோகத்தினை வாபஸ் பண்ணாமல், அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படாமல் இந்தியாவின் வற்புறுத்தலுக்கு கீழ்ப்படிந்து பேச்சுவார்த்தையில கலந்து கொண்டமை. போராட்டத்தில் இயக்கங்கள் பலமுற்றிருக்கவில்லை என்பதைத்தான் காட்டுகின்றது. நாம் எதிர் நோக்கும் பிரதான பிரச்சினை, சிங்களக் குடியேற்றப் பிரச்சினை, தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றங்களைச் செய்வேன் என்று இறுமாப்புடன் கூறிக்கொண்டு இருக்கும் வேளையில் இக்குடியேற்றங்கள் பற்றி ஒரு தெளிவான கருத்து முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. 48 ஆம் ஆண்டின் பின் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களக் குடியேற்றக்காரர் அனைவரும் தமிழ்ப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பது எமது பிரதான கருத்தாக முன் வைக்கப்படல் வேண்டும்.

இதனைக் கருத்தில் கொள்ளாத எந்த வாதப்பிரதிவாதங்களும் அடிப்படையில் பயனற்றதாகும். குறிப்பாக முஸ்லிம் மக்களது பாரம்பரியப் பிரதேசமாகிய அம்பாறை பறிபோயுள்ளது. இது ஓர் உடனடிப்பிரச்சினையாகும். இவ்வுடனடிப் பிரச்சினையை யிட்டுப் பேசப்படாமை வேதனைக்குரியது.

1981 ஆம் ஆண்டு குடிசனப் புள்ளி விபரங்களின்படி திருகோணமலை மாவட்டத்தில் ஏறக் குறைய தமிழ் மக்களின் அளவுக்கு சிங்களக்குடியிருப்பாளர்கள் தொகை அதிகரித்துள்ளது.

பிரசார நோக்கிலும் கூட இதனையிட்டு அரச தரப்பினருக்கும், இந்தியாவுக்கும் நம் வற்புறுத்தி இருக்க வேண்டும். இங்கு ஒரு முக்கிய விடயத்தினை உணர்த்த வேண்டியுள்ளது. அதாவது மகாவலிக் குடியேற்றங்களில் (சிங்களப் பகுதிகளில்) பல இலட்சக் கணக்கான சிங்கள மக்களைக் குடியேற்றவிருப்பதாக அறிவிக்கும் அரசு ஏன் எமது பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளவர்களை மகாவலிப் பகுதிகளில் மீளக்குடியேற்ற முடியாது?

இந்திய அரசு அசாம் மாநிலத்தில் 70 ஆம் ஆண்டுக்குப்பின் குடியேறிய வெளி மாநில மக்களை வெளியேற்ற ஒப்புக்கொண்டதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத்துடன் எமது ஆயுதப் போராட்டங்களின் விளைவாக நஷ்டமடைந்த சிங்கள மக்களுக்கு அரசு நட்ட ஈடுகளை வழங்கியுள்ளது. அதேவேளை அரச ஆயுதப்படையினரால் கொன்று குவிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும், அழிக்கப்பட்ட உடைமைகளுக்கும், தமிழின அழிப்புக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு வார்த்தை கூட இப்பேச்சுவார்த்தையில் காணப்படவில்லை.

35 வருட காலமாக வரலாற்றில் நடைபெற்ற சாத்வீகப் போராட்டங்களில் அரசுக்கு எவ்வித பொருளாதார நஷ்டங்களோ அரசியல் நிர்வாக நெருக்கடிகளோ ஏற்படவில்லை. கடந்த 10 ஆண்டுகால ஆயுதப் போராட்டந்தான் அரசுக்கு பொருளாதார ரீதியான இழப்புக்களுக்கும், உள்நாட்டு, சர்வதேச ரீதியிலான அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கும் முகம்கொடுக்க நிர்ப்பந்தித்துள்ளது. அந் நெருக்கடிகளின் விளைவே அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்தமையாகும்.

சர்வதேச உறவு பொறுத்து, அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையேயான உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினால் இலங்கை அரசை அமெரிக்க அரசு முழுக்க முழுக்க பாதுகாக்க முற்படாது என்ற எண்ணமும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளமை இப்பேச்சுவார்த்தைக்கான முன்தள்ளுதலாக அமைகின்றது.

(நன்றி: ''போர் நிறுத்தமும் பொய்மைகளும்'' —சுதந்திரம் வெளியீடு ஜூலை 1985)

## 18 வீடுகளும் வழங்கப்படும்

(குருநகர்)

குருநகர் தொடர்மாடி வீடுகளில் எஞ்சி இருக்கும் பதினெட்டு வீடுகளையும் வழங்குவதற்கான முடிவுகள் பெரும்பாலும் எடுக்கப்பட்டுவிட்டதாகத்தெரியவந்துள்ளது.

'ரெலோ' தலைவர் சிறீசபாரத்தினம் பேட்டி

# தமிழ் மக்கள் நலன் பேணவே இயக்கங்கள் இணைந்தன

'ரெலோ' இயக்கத் தலைவர் திரு. சிறீசபாரத்தினத்துடன், பிரபல பத்திரிகையாளர் அனிதா பிரதாப நடத்திய பேட்டிக் கட்டுரை, கடந்த ''ஏப்ரல் 28–மே 4''ம் திகதிய ''சண்டே'' சஞ்சிகையில் வெளியானது. அதனை முழுமையாக மொழிபெயர்த்து, கேள்வி பதில் வடிவத்திலேயே இங்கு தருகின்றோம்:-

வினா: சென்ற ஆண்டு, பயணப் போலி ஆவணங்கள் வைத்திருந்தமைக்காக பெல்ஜியத்தில் வைத்து நீங்கள் கைது செய்யப்பட்டீர்கள் எனக் கூறப்பட்டது உண்மையா?

விடை: தமிழர்களைத் தவறான வழியில் திசைதிருப்பும் பொருட்டு, இலங்கை அரசாங்கத்தினால் அவிழ்த்து விடப்பட்ட பொய்ப் பிரசாரம் அது. எனக்குத் தீங்கிழைத்தல் சாத்தியமாகும் என்ற கருத்தைத் தோற்றுவிப்பது அவர்களது (இலங்கை அரசினது) உத்தேசம் என நான் எண்ணுகிறேன். பெல்ஜியத்துக்குக் கூட்டத்தானும் நான் இருந்ததில்லையே.

வினா: ''ரெலோ'' இயக்கம் ''எல் ரீ ரீ ஈ.'' எனும் தமிழீழ விடுதலைப் புலிகளின்பால் பகைமை கொண்டுள்ளதாக அறியப்பட்டிருக்கிறது. உங்களுக்கும் ''எல். ரீ. ரீ. ஈ.'' எனப்படும் ''புலிக''ளின் தலைவர் பிரபாகரனுக்குமிடையில் உள்ள போட்டாபோட்டி, கிட்டத்தட்ட பிரபாகரனுக்கும் ''புளொட்'' இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரனுக்குமிடையில் நிலவுவதைப் போலக் கடுமையானது. உங்களுக்கும் ''புலிக''ளுக்குமிடையில் இப்போது ஐக்கியம் எப்படி உண்டாயிற்று?

விடை: புலிகளும், 'ரெலோ'வும் தம்மிடையே இருந்த போர்க் கொடிகளை இறக்கத் தூண்டுகோலாக அமைந்தது, உலகளாவிய தமிழ் மக்களிற் பெரும்பாலானவர்களுடைய விருப்பம் ஆகும். மற்றெல்லாவற்றையும்விட, தமிழ் மக்கள் மிக விரும்புவது, ''பெடியன்'' எனப் பொதுவாக வழங்கும் தமிழ்ப் போராளிகள் மத்தியில் ஒற்றுமை பேணப்படுவதையே. குறிப்பாகப் போர் நடவடிக்கைகளில், நாம் இந்த ஒற்றுமை அல்லது ஐக்கியம் பேண இடமுண்டு. ஆகவே, நாம் அனைவரும் ஒற்றுமையாதல் வாயிலாக, தமிழ் மக்களின் தேவையை நிறைவேற்றுகிறோம்.

''ரெலோ'' இயக்கமே முதலாவது ஈழப் புரட்சிகர நிறுவனமாகும். 1970 இல் நாம் ஆரம்பமானோம். பிரபாகரன் எம்முடன் இருந்தார்; அதன் பின்னர், தமது சொந்த இயக்கத்தை உருவாக்குவதற்காக, அவர் எம்மைவிட்டுச் சென்றார். இப்பொழுது, நசுக்கப்பட்ட, அடக்கியொடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளிக்கும்வகையில், அவ்விருப்பங்களைக் கனம்பண்ணும் வகையில் நாம் ஒருங்கு சேர்கிறோம். எல்லாவற்றையும் ஒதுங்குநீக்கி எமது தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலநிலையிலிருந்து அவர்களை விடுவித்தற்காகத்தானே நாம் போரிட்டுவருகிறோம்!

இடை நடுவில் முறிந்துபோயின?

விடை: நாங்கள் இன்னமும் அதனைக் கைவிட்டுவிடவில்லை. ஒரே நேரத்தில் எல்லா இயக்கங்களையும் நாம் ஒன்றுசேர்க்க ஒருங்கிணைக்க முடிவதில்லை; இதனை அனுபவ வாயிலாக நாம் கற்றுக்கொண்டுள்ளோம். ''ரெலோ'', ''ஈ.பீ. ஆர். எல். எப்.'', ''ஈரோஸ்'' ஆகிய நாம் மூவரும் ஒன்று சேர்ந்தோம். இப்பொழுது ''எல் ரீ. ரீ ஈ-யும் எம்முடன் சேர்ந்துகொண்டுள்ளது. ''புளொட்''டும் எங்களுடன் ஒற்றுமையாகும் என்பது எமது நம்பிக்கை.

வினா: ஆனால் ஒன்று. ''எல். ரீ. ரீ ஈ.'' கூட்டிணைப்பினுள் வந்து சேர்ந்துகொண்ட அதே காரணத்தினால், ''புளொட்'' வெளியில் நின்றுகொள்ளத் தீர்மானிக்கலாம் அல்லவா?

விடை: அது அவசியமல்ல. எதனைத்தான் சொன்னாலும் சரி, ''ரெலோ''-வும் 'புலிகளும்'' பாரதூரமான வேறுபாடு கொண்டனவாக இருந்துங்கூட, ஒருங்கிணைந்து ஒற்றுமையாகிவிட்டன இது சாத்தியமாகக் கூடியதாக இருந்ததுதானே? ஆனபடியால், ''புலிகளும்'' ''புளொட்''டும் ஏன் ஒன்று சேரலாகாது?

## தீவிரவாத இயக்கங்களை சின்னாபின்னப்படுத்தி படுகொலை செய்வதற்கு......

வினா: நான் கதைப்பது உங்கள் கடந்தகால வேறுபாடுகளைப்பற்றியல்ல. மிக அண்மையில், சென்ற வருடம்கூட, ''புலிக''ளும் ''ரெலோ''வும் பொல்லாத பகைவர்களாக இருந்தார்களே!

விடை:

ஆம்: உண்மைதான். அதைப் பற்றியெல்லாம் இப்பொழுது நான் பேச விரும்பவில்லை. ஏனென்றால், மீண்டும் அது எமக்கிடையில் கசப்பு உணர்வைப் பிறப்பிக்கும். நீங்கள் கூறுவதுபோல, எமக்கிடையில் ''போட்டாபோட்டி'', இருந்துங்கூட, நாம் ஒருங்கு சேர்ந்துவிட்டோம். அது ஒரு மெய்ம்மையை நிரூபிக்கிறது! அதாவது, எமது கடந்தகாலப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் பொருட்படுத்தாது, மறந்து, போராட்டத்தினைப் புதிதாக ஆரம்பிக்க நாங்கள் இணங்கியுள்ளோம் என்பது இதனால் நிரூபணமாகியுள்ளது. தமிழ்ப் பொதுசனங்களின் அக்கறைகளை, நலன்களை மனதில் இருத்தி, எமது பெருமிதங்கள், விருப்பு வெறுப்புகளை ஓரளவு மறந்து செயற்பட வேண்டி இருக்கிறது. இதனை உணர்ந்தமையினாலேயே நாம் இவ்வாறு ஒருங்குசேர முடிந்துள்ளது.

வினா: இப்பொழுது பிரபாகரனோடு உங்கள் உறவுகள், தொடர்புகள் எப்படியாக உள்ளன?

விடை: நான் ஆகட்டும், எனது கட்சியாகட்டும், நடந்து முடிந்தவற்றை மன்னித்தோம், மறந்தோம். பிரபாகரனைப் பொறுத்தமட்டிலும் அது அப்படித்தான் என நம்புகிறேன்.

வினா: ''புளொட்''டுடனான பேச்சு வார்த்தைகள் ஏன்

வினா: தமிழ்ப் போராளிகளை அணிசேருபடி தற்போது ஏன் தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர்?

விடை: 1983, ஜூலை படுகொலைகள் நிகழ்ந்ததுதொட்டு இலங்கை அரசின் கொடுமைகள் வரவர, ''ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து'' என்ற போக்கில் போய்க் கொண்டிருப்பது தமிழர்களுக்கு வெட்டவெளிச்சமாகியிருக்கிறது. எங்களைக் கூண்டோடு கொன்றொழிக்க இலங்கை அரசாங்கம் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்பது தமிழ் மக்களுக்குத் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது,

வினா; தமிழ்ப் பெடியள்'', அதாவது தமிழ் இளம் போராளிகள், ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் எனத் தமிழ் மக்கள் விரும்புவது ஏன்? தமிழர்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்கவா? சிங்கள ஆயுதப் படைகளை விரட்டியடிக்கவா? அல்லது தமிழீழம் நிறுவவா?

விடை: இவை மூன்றையும் சாதித்தற்காகத்தான். இலங்கையிலுள்ள தமிழர் ஒவ்வொருவரதும் இறுதிக் குறிக்கோள், தமிழ் ஈழம் அமைத்தலேயாகும்.

## வியாகரண..,

-4ம் பக்கத் தொடர்

அவர்களிடம் பாடம் கேட்க வேண்டும் என்னும் ஆசை அதிகரித்தது.''

## கௌரவங்கள்

இவரது தமிழ்ச் சேவைகளைப் பாராட்டி யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் 1-12-52 இல் ''பண்டிதமணி'' என்னும் பட்டம் வழங்கப் பற்றுப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். 1963 இல் இவருக்குப் பாராட்டு விழாவொன்றை எடுத்து பொற்கிழி வழங்கினர். வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையை மையமாகக் கொண்ட பாராட்டு விழாச் சபையினர். ''பொற்கிழி' விழாச் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

22-01-1978 இல் நீண்ட காலத் தமிழ்ச் சேவையின் பின் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரது தமிழ்ப்பணி விரிவாக ஆராயப்பட வேண்டும். இவரது மாணவர் பரம்பரையினர் இச்சிரிய தொண்டைச் செய்வார்களா?

(ஆதாரம்: பொற்கிழி விழா மலர்– திருமதி ச. சண்முகநாதன்)

## 40 லட்சம் ரூபா வருமானம

ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் இந்த ஆண்டு முதல் மூன்று மாதங்களில் ஆயுர்வேத மருந்து உற்பத்தி மூலம் நாற்பது லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

ஈழமுரசு

## சர்வதேச தங்கக் கடத்தலுக்கு கட்டுநாயக்கா மத்திய தளம்

சர்வதேச ரீதியில் தங்கம் கடத்துவதற்கு மத்திய இடமாக கட்டுநாயக்கா விமான நிலையத்தை கடத்தல்காரர் பாவிப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கடந்த சில வாரங்களாக இக்கடத்தல் நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டன. சிங்கப்பூர், துபாய் ஆகிய இடங்களில் இருந்து தங்கம் கட்டுநாயக்கா வழியாக இந்தியாவுக்கு கடத்தப்படுவதாகவும் இக்கடத்தலினால் பெறும் பணம் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு கொடுக்கப்படுவதாகவும் 'லங்கா புவத்' நேற்று அறிவித்துள்ளது. சிங்கப்பூருக்கு தங்கம் கடத்த முனைந்த நால்வர் அண்மையில் கைதானதை அடுத்தே இவ்விபரங்கள் தெரியவந்தன.

யாழ். அரசாங்க அதிபர் பேச்சு :

# பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தால் என்றாவது ஒருநாள் நஷ்டஈட்டை பெறமுடியும்!

(வண்ணார்பண்ணை)

"யாழ்ப்பாணத்திலும் பாதுகாப்புப்படையினரால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகள் சேதமடைந்தவர்கள், அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது அப்பகுதிக்குரிய உதவி அரசஅதிபரிடமோ சென்று முறைப்பாடுகளைப் பதிவு செய்து அதன் பிரதியை சமூக சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தால் இன்று நடைமுறைப் படுத்தாவிட்டாலும் பத்து வருடங்களுக்குப் பின்னராவது அதற்குரிய நஷ்டஈடு கிடைக்கும்" என யாழ். அரசாங்க அதிபர் திரு எம்.பஞ்சலிங்கம்பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டுஉரை யாற்றும்போது தெரிவித்தார்.

மேற்படி குழுவின் ஆண்டுக் கூட்டம் நேற்றுக்காலை யாழ் நகரில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் "1983 யூலை கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட பத்து வருட சேவைக்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு இளைப்பாற்றுக் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துள்ளோம். அநுராதபுரம் கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட பலருக்கும் உதவிகளைச் செய்துள்ளோம். பாதிக்கப்பட்டவர்கள் எவராயிருந்தாலும் ஆசிரியர்கள், தனியார் துறை ஊழியர்கள் என்னுடன் வந்து பிரச்சினைகளைத் தெரியப்படுத்தினால் முயற்சிகள் எடுத்து அவர்களுக்கு உதவிகளைச் செய்வோம்" என்றும் சொன்னார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. எ. விக்கினலிங்கம் பேசுகையில் "எமது அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவோடு இணைந்தும் செயற்பட்டு வருகின்றது. இவ் இணைப்புக் குழுவுக்கு வேண்டிய நிர்வாகச் செலவுகளையும் செய்து வருகின்றோம். பாதிக்கப்பட்டவர்கள்எங்களுடன் தொடர்பு கொண்டால் வசிப்பதற்கு வீட்டு வசதிகள், குடிசைக் கைத்தொழில் போன்ற உதவிகளைச் செய்ய நாம் தயாராக இருக்கின்றோம்" என்றும் தெரிவித்தார்.

யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி இரா. பாலசுப்பிரமணியம் பேசுகையில், "பாதுகாப்புப் படையினரால் உயிரிழந்தவர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈட்டினை வழங்கமுன்வர வேண்டும்" என்று வேண்டினார்.

### இலங்கை....

—1-ஆம் பக்கத் தொடர்

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 643 பேரில் ஒரு சிலரே விடுவிக்கப்படுவதாக பூட்டான் மாநாட்டில் இலங்கை அரசின் பிரதிநிதிகள் கூறியதாகவும், ஆனால் இதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாட்டின்....

பான பூட்டான் மாநாடு பற்றி அவர் தெரிவிக்கையில், அங்கு எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் பொதுத் தேர்தல் அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியது அவசியம்என்று குறிப்பிட்டார்.

## மன்னிப்பு கோருகிறோம்

சிற்றி மெடிக்கல்ஸ் உரிமையாளர் திரு. L. V. சிங்காராபரி அவர்களை கடத்தியது சம்பந்தமாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மீது (T. E. L. O) தவறுதலாக குற்றம் சுமத்தியமைக்காக T. E. L. O. இயக்கத்தினரிடமும், பொது மக்களிடமும் பகிரங்க மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,
ஊழியர்கள்
சிற்றிமெடிக்கல்ஸ்
யாழ்ப்பாணம்

யாழ்நகரில் சிறப்பான பயிற்சி

SPECIAL ENGLISH COURSES
G. C. E. O/L (85 Dec.) பரீட்சையில்
திறமைச் சித்தி பெற
விசேட ஆங்கில மொழி வகுப்புகள்
உயர்கல்வி, பேச்சுப் பயிற்சி, வாசித்தல்
போன்றவற்றில் திறமை பெற
INTEGRATED ENGLISH
★ 4 மாத துரித பயிற்சி
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
ஆசிரியர்: திரு. T. N. பஞ்சாட்சரம்
★ வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில்
ஆரம்பம்: 2-8-1985

விபரங்களுக்கு: நேரில் / தபாலில்
ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD, JAFFNA.

## பிள்ளையார் உற்சவம்

மிருசுவில், விடத்தற்பளை சம்பரவெளி பிள்ளையார் ஆலய உற்சவம் 22ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 30ஆம் திகதி தேர், 31 ஆம் திகதி தீர்த்த உற்சவம் ஆகியவற்றுடன் முடிவடையும்.

### நீலனும் சூசையும்....

—1-ம் பக்கத் தொடர்

முகர்களைச் சந்திப்பர்.

பூட்டான் மாநாட்டு நிலைமைகள் பற்றி உள்ளூர்ப் பிரமுகர்களுக்கு விளக்குவதே இவர்களது விஜயத்தின் நோக்கமாகும்.

ஆகஸ்ட் முதல் வாரத்தில் இவர்கள் மீண்டும் தமிழகம் செல்வர் எனவும் தெரியவந்துள்ளது.

### 25, 26ம் திகதி....

- 1ம் பக்கத் தொடர்

என இப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத்திற்கென சரியான அரசியல் பாதை வகுத்து புரட்சிகர இராணுவத் தயாரிப்பிற்கு வழிசமைத்த தங்கத்துரை, குட்டிமணி ஆகியோருக்கு இப்பிரசுரம் மூலம் வீர அஞ்சலியும் செலுத்தப்பட்டுள்ளது.

### கொழும்பில்—

- 1ம் பக்கத் தொடர்

இனப்பிரச்சினை பற்றிய பூட்டான் மாநாடு நடைபெறும் தினமே இது வெடிக்கவைக்க திட்டமிட்டதாகவும் தொடர்ச்சியாக இக்குண்டு வெடிப்பை நடாத்தி கொழும்பு மாநகரை அதிரவைக்க ஈரோஸ் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்ததாகவும் 'லங்கா புவத்' மேலும் தெரிவித்தது.

இது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் யாழ்ப்பாண ஈரோஸ் தலைவர்களிடம் இருந்து தமக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ரெலோவிடம்....

- 1ம் பக்கத் தொடர்

வின் மீது வீண் குற்றச்சாட்டு சுமத்தியதற்காக ரெலோவிடமும் பொது மக்களிடமும் மன்னிப்புக் கோருகிறோம்" என எழுதப்பட்டிருந்தது.

## கிழக்கிலங்கை அகதிகளுக்கு மேற்கு ஜேர்மனியின் உதவி

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியாக மேற்கு ஜேர்மன் அரசாங்கம் நாலரை லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதற்கான காசோலை திருமலை - மட்டுநகர் ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளையிடம் கொழும்பு 'செடெக்' நிறுவனத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இப்பணம் கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களின் உடை, உணவு, கல்வி மற்றும் சேதமாக்கப்பட்ட பாடசாலைகளை திருத்துதல் முதலியவற்றுக்கு பயன்படுத்தப்படும்.

## வாகனமின்றி பெரும் கஷ்டம்

கிளிநொச்சி லோங் ஸ்தாபனம், ஆரோபண மாணவர் விடுதி ஆகியவற்றின் அதிபர் வண. பிதா. மதுரநாயகம் அடிகளின் ஹைஏஸ் வாகனம் சில மாதங்களுக்கு முன்பு இனம் தெரியாத சிலரால் எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வண. மதுரநாயகம் அடிகள் இந்த நிறுவனங்களில் சுமார் நூறு அநாதைச் சிறுவர்களைப் பராமரிப்பதுடன், படித்த இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சியும் அளித்துவருகிறார்.

இந்த வாகனம் இல்லாமையால் இவர் தமது முக்கிய கடமைகளைச் செய்ய முடியாது இருப்பதாகவும், இதனால் அந்த வாகனத்தை மீண்டும் ஒப்படைக்குமாறும் கோரி ஜெயந்திநகர், உருத்திரபுரம் பங்கு மக்கள் ஒரு நாள் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

### 275 பேர்—

- 1ம் பக்கத் தொடர்

பட்டதாகவும், 195 பேர் காணமல் போனதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தால் பல வீடுகளும் நான்கு உல்லாசப்பயண ஹோட்டல்களும் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டன.

இதுவரை எண்பது பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதுடன் அதில் பதினைந்துபேருடையவை அடையாளம் காணப்பட்டன.

## பாரதத்தின் செயற்கிரகம் தயாராகிறது

(புதுடில்லி)

பாரதத்திலிருந்து "இன்சாட் — 1 சி" செயற்கைக் கிரகத்தைச் செலுத்துவதற்கான முயற்சிகள் மிகவும் திருப்தியளிக்கக் கூடியதாகவுள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடுத்த ஆண்டு ஜூலைமாதமளவில் அமெரிக்க விண்வெளிக் கலத்தில் இக் கிரகம் செலுத்தி வைக்கப்படுமெனவும், விண்வெளியில் எடுத்துச் செல்லப்படும் சாதனங்களை ஆராயும் நிபுணர் ஒருவரும் இவ்விண்வெளிப் பயணத்தில் செல்லவிருக்கின்றாரெனவும் புதுடில்லியில் விஞ்ஞான இலாகாவுக்கான பாராளுமன்ற ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

## தட்டுப்பாடு

(மிருசுவில்)

வாழை, எலுமிச்சை என்பவற்றுக்கான மானியத்தைப் பெறுவதற்குரிய விண்ணப்பப் படிவங்களுக்கு இப்பகுதியிலுள்ள கமநலச் சேவை நிலையங்களில் தட்டுப்பாடு நிலவுகின்றது.

## மரண அறிவித்தல்

### பூதப்பிள்ளை பொன்னம்பலம்

ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியரும், முன்னாள் மயிலிட்டி கிராமச் சங்கத் தலைவரும், சமாதான நீதவானுமாகிய பூதப்பிள்ளை பொன்னம்பலம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சி அம்மாளின் கணவரும், சிவநாதன், ஜெயநாதன், இராமநாதன், யோகநாதன், ருக்மணிதேவி ஆகியோரின் தகப்பனாரும், தில்லைச்சிற்றம்பலம், பத்திராதேவி செல்வராணி, விமலாதேவி ஆகியோரின் மாமனாரும், சங்கர், பிரபா, ரூபன், நடராசன், சுசீலா, ஐங்கரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (21—7—85) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

ஆதிமயிலிட்டி, காங்கேசன்துறை

"ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 21-07-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336